துலை (ஐப்பசி) – 2020

# நம்மட முற்றம்

இல்லம் : 01 முற்றம் : 02

## அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு!

தமிழ்பேசும் மக்கள் தமிழ் பேச முன்வர வேண்டும்
செவிடான காதில் சங்கு ஊதினாலென்ன?.....
பெண் அரச ஊழியர்களும் பிரசவ விடுப்பும்
ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் வகிபாகம்.



தாக்குதல் – இடிமுழக்கம்
காலத்தின் கோலம்.
நம்மட ஊரக அமைப்புகள்

உருபா 60.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RESTAURANT

# Grean Tulsi

THE TASTE OF 2020

# NEW TANDOORI CUISINE

துளசி உயர்தர உணவகம்

217, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை. 0775515510





HOTLINE
0775515510
0262255510

Grean Tulsi
THE TASTE OF 2020
RESTAURANT

NEW TANDOORI CUISINE

INDIAN - CHINESE - TANDOORI

HOTLINE
0775515510
0262255510

ANY TYPE OF PARTY ORDERS
&
FUNCTION ORDERS
UNDERTAKEN

One and Only attractive city view Restaurant

Roof Top Garden Restaurant

Dine-In Available
Take Away
Home Delivery

delicious!

Free Wi-Fi | Master Card, Visa Card & Debit Card We Accept



திருக்கோணமலை நகர் முழுவதையும் இரசித்துக் கொண்டே உணவுண்ண

திருக்கோணமலை நகரில் ஒரேயொரு இடம், மனதிற்கு இதமாக குடும்பத்துடன் உணவுண்டு மகிழ ஒரு தடவை வருகைந்து பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட முற்றம்

**அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு**

**வெளியீடு**

**நம்மட முற்றம் வெளியீட்டகம்**

**திருக்கோணமலை**

'நம்மட முற்றம்' - ஆசிரியர்கள்

பொறியியலாளர் கதிர்.திருச்செல்வம், திருக்கோணமலை

முனைவர் அ.ப.மு.அஷ்ர.்.ப்,

தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

தொடர்புகளுக்கு

எண்:48/116, விநாயகபுரம், கண்டித்தெரு, திருக்கோணமலை.

அலைபேசி : 0772908990

மின்னஞ்சல் : nammadamuttam@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட முற்றம்
# ஆசிரியர்கள் கதைக்கின்றனர்.

## தமிழ் பேசும் மக்கள்
## தமிழ் பேச முன்வர வேண்டும்

நம்மட முற்றம் இரண்டாவது ஏட்டில் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். முதலாவது ஏடு முழுமைய டைந்து வெளியீடு நடைபெற்று சில நாட்களின் பின் கொவிட்-19 இன் தாக்கம் நாட்டில் அதிகரித்தனால் நாம் அனைவரும் வீடுகளுக்குள் முடங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அம்முடக்கம் 'நம்மட முற்றத்திற்கும்' ஏற்பட்டது.எனினும் மீண்டும் 'நம்மட முற்றம்' வெளிவருவதில் எம்மைப் போன்று படிப்போர் களாகிய நீங்களும் மகிழ்ச்சியடைவீர்கள் என நம்புகின்றோம்.

இன்று எம்மிடையே வாசிக்கின்ற பழக்கம் சிறிது சிறிதாக குறைந்து வருவதனையும் வளர்ந்து வருகின்றவர்களின் பேச்சாற்றலில் திறன் குறைந்து செல்வதனையும் நாம் கண்கூடாகப் பாரக்கின்றோம். இந்நிலையானது எமக்கும் எமது எதிர்கால சந்ததியி னருக்கும் ஆரோக்கியமானதல்ல என்பதனை உணர்ந்த நாம் வாசிப்புப் பழக்கத்தினை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கோடு உருவாகியதே 'நம்மட முற்றம்'.

பள்ளிச் சிறார்கள் தொடக்கம் பெரியோர் வரை அனைவரும் வாசிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதுடன் தேடல் அத்கரிக்க வேண்டும் என்பதும் அதன் மூலமாக திறமையான முறையில் கருத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வெளிப்படுத்துகின்ற ஆற்றல் மேலோங்க வேண்டும் என்பதுமே 'நம்மட முற்றத்தின்' நேரிடையான எதிர்பார்ப்பாகும்.

நாம் பேசுகின்ற மொழி 'தமிழ்மொழி'. எனினும் தற்போது நாம் பேசுகின்ற மொழி தமிழாக இல்லை என்பது கவலை தருகின்றது. நமது மொழியில் சமற்கிருதத்தின் தாக்கம் அதிகரித்திருந்த காலம் போய் ஆங்கிலம் ஆட்கொள்கின்ற நிலை வளர்ச்சியடைந்து செல்வதனை நாம் காண்கின்றோம். இவ்வாறான வேகத்தில் எமது மொழி ஆங்கிலத்தினால் விழுங்கப்படுமாயின் எமது மொழியின் இருப்புக் கேள்விக் குறியாகும் என்பதில் ஐயமில்லை. இதனைக் கருத்தில் வைத்து 'நம்மட முற்றத்தின்' ஆக்கங்கள் அனைத்தும் தூய தமிழிலே ஆக்கப்படுவதற்கு இயலுமானவரை முயன்றிருக்கின்றோம்.

தமிழ் பேசுகின்ற மக்கள் அனைவரும் நாம் 'தூயதமிழைப்" பேச வேண்டும் என்பது தமிழ் ஆர்வலர்களின் இன்றைய கோரிக்கையாக உள்ளது. அக் கோரிக்கையுடன் 'நம்மட முற்றமும்' முழுமையாக உடன்படுகிறது. **'தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தமிழை பிற மொழிக் கலப்பின்றி பேச வேண்டும்'** என்ற கோரிக்கையினை 'நம்மட முற்றம்' படிப்போர்கள் அனைவரிடமும் கோரிக்கையாக முன்வைக்கின்றது.

ஆசிரியர்கள்.- நம்மட முற்றம்.

---

**ஆக்கங்கள், ஆலோசனைகள், அறிவுரைகள் எதிர்பார்க்கின்றோம். மாணவர்கள், படிப்போர்கள் தங்கள் ஆக்கங்களை எமக்கு அக்டோபர் 15ஆம் நாளிற்கு முன்பாக அனுப்பி வையுங்கள் (முகவரி முன்பக்கத்தில்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வியில் பெற்றோர்களின் வகிபாகம்.

## (Parental Involvement and engagement in Primary Education Development)

திரு.சிவானந்தம் சிறீதரன் (SLEAS –I)
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



ஆரம்பக்கல்வியே ஒவ்வொரு பிள்ளையினதும் முதன்மையான மற்றும் அடிப்படைக்கல்வி உரிமையாகும். ஒரு பிள்ளைக்கு ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பது ஓர் அரசுக்கு மட்டும் பொறுப்பல்ல என்பதுடன் பெற்றோர்களினதும் கடமையும் பொறுப்புமாகும். ஒரு பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி வழங்கப்படுவதன் அடிப்படை நோக்கம் அப் பிள்ளைக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் உள்ளக பயந்த மனோபாவத்தைக் குறைத்துக்கொள்வதன் மூலம் வாய்ப்புகளுக்கான வழிகளைத் திறந்து விடுவதுடன் தன்விருத்தியினை ஏற்படுத்துவதுமாகும்.

ஒரு சமூகத்திற்கு வழங்குகின்ற முதலாவது நலன்புரி நடவடிக்கையாக இது கொள்ளப்படுவதுடன் தொடர்விருத்திக்கான முதல்படியுமாகும். அதற்கும் மேலதிகமாக உலக வாழ்க்கையை வெற்றி கொண்டு பூரணப்படுத்துவதற்காக அவர்களினுடைய சொந்த வாழ்க்கையினை ஆரம்பிப்பதற்காக பிள்ளைகள் தயாராகும் கட்டமாகும். மேலும் பிள்ளைகள் வீட்டில் பெற்றோருடன் தொடர்பாடல் செய்வதனூடே பிறருடன் எவ்வாறு தொடர்பாடல் செய்வது என்பதனைக் கற்றுக் கொள்கின்றார்கள். எனவே ஆரம்பக்கல்வியின் மிக முக்கிய வகிபாகம் பிள்ளைகளின் விருத்தியினை உறுதிப்படுத்துவதேயாகும். அதனது அர்த்தம் அனைத்துப் பிள்ளைகளும் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்மட்ட இயலுமைகளைப் பயன்படுத்தி சமூகஅறிகை, கலாசார, உணர்வுசார், மற்றும் பௌதீக ரீதியான திறன்களை விருத்தி செய்து கொள்வார்கள். பிள்ளைகளின் பால் நிலை மற்றும் குடும்பப் பின்னணி என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் அவர்களுடைய கல்வி சார் நடவடிக்கைகளில் அதிகமான அளவில் செல்வாக்குச் செலுத்துவதற்காக நாம் சிறந்த தரமான ஆரம்பக்கல்வியினை வழங்கவேண்டும் என்பதனால் சிறந்த முன்பள்ளிக் கல்வியினை வழங்குதல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி என்பது அடுத்த தலைமுறையினரையும் சிந்தனையாளர்களையும் புத்தாக்குனர்களையும் உருவாக்கு கின்ற பணியில் பங்களிப்புச் செய்கின்ற மிக முக்கியமான பணியாகும். பொதுவாக ஆரம்பக்கல்வியானது ஒரு கற்போனுக்கு பின்வரும் வாய்ப்புக்களைக் கட்டாயமாக வழங்குகின்றது.

1. எழுத்தறிவையும் எண்ணறிவையும் ஆக்கத்திறனையும் தொடர்பாடல் திறனையும் பெற்றுக்கொள்ள உதவுகின்றது.
2. மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு இட்டுச் செல்ல வழிவகை செய்வதுடன் தொடர் கற்றலுக்கான தூண்டலை வழங்குகின்றது.
3. தர்க்கரீதியாகத் தீர்மானம் எடுப்பதற்கும் தர்க்கரீதியாகச் சிந்திப்பதற்கும் இயலுமையை விருத்தி செய்கின்றது.
4. வேலையின் மதிப்பிற்கு பாராட்டுதல்களையும் மதிப்பையும் பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.
5. ஏதிர்பார்க்கப்படுகின்ற சமூக தராதரங்களையும் ஒழுக்க மற்றும் சமயப் பெறுமதிகளையும் விருத்தி செய்ய உதவுகின்றது.
6. தன் ஒழுக்கத்தையும் உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக துணிச்சலையும் கொடுத்து ஆரோக்கிய வாழ்விற்கு அத்திவாரமிடுகின்றது.
7. அழகியல்திறன் மற்றும் பெறுமதிகளை விருத்தி செய்வதுடன் தமது சொந்த கலாசார நடைமுறைகளையும் பிற கலாசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளையும் அறிமுகம் செய்கின்றது.

8. சூழல் பற்றிய விழிப்புணர்வினையும் மற்றும் நம்பிக்கையையும் கட்டி எழுப்புகின்றது.
9. தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்யத் தூண்டுகின்றது.
10. சமூகம் மற்றும் குடும்பம் மீதான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புகின்றது.

ஆரம்பக்கல்வியே அடிப்படைக்கல்வியாகும்.

எமது பிள்ளைகளின் தலையெழுத்தை தொடங்குவதும் இதுவெனவே குறிப்பிடலாம். பொதுவாக ஆரம்பக்கல்வி என்பது வீட்டிலிருந்தே ஆரம்பிக்கின்றது. பெற்றோர்களே அவர்களது முதலாவது ஆசிரியர்கள். பிள்ளைகளின் பண்புகளை செப்பனிடு கின்ற முக்கிய பொறுப்பு அவர்களின் முதன்மையான வகிபாகம் அகும். பாடசாலையிலும் வீட்டிலும் ஒரு சமநிலையான கற்றலை வழங்குவதன் மூலம் மாணவர்கள் வார்த்தெடுக்கப் படுகின்றனர். பெற்றோர்களே உதவும் கரங்களாக இருந்து அவர்களது கல்விப்பயணத்திற்கு உண்மையான தூண்டுதலை வழங்கி பிரயாணம் செய்கின்றார்கள். பெற்றார்களின் ஈடுபாட்டின் மூலமே ஒருபிள்ளையின் சாதனைகள் அத்தனையும் படைக்கப்படு கின்றன. அவர்களது ஈடுபாடும் வகிபாகமும் மட்டுப்படுத்தப்பட்ட தல்ல. பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி கற்றலில் பெற்றோர்கள் அவர்களது பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துகின்றார்கள் என்பதிலேதான் தங்கியிருக்கின்றது.

பொதுவாக பிள்ளைகளின் கற்றலில் பின்வரும் வகைகளில் பெற்றோர்கள் ஈடுபடுவதன் மூலம் ஆரம்ப மற்றும் அடிப்படைக் கல்வியில் பிள்ளைகளின் மீதான செல்வாக்கினைச் செலுத்த முடியும்.

முன்மாதிரியாக இருத்தல் (**Be a Role model**)

பெற்றோர்கள் என்ன செய்கின்றார்களோ அவற்றின் மூலம் அவர்கள் விரைவாக தூண்டப்படுகின்றார்கள். அதனால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கற்றல் கட்டங்களில் முன்மாதிரியாக இருக்கும். பெற்றோர்களே சிறுவர்களின் முதல் ஆசிரியர்கள். அதனால் வீட்டிலேயே முதல் விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார்கள்.

**ஒன்றாகச் சேர்ந்து வாசித்தல் (Reading together)**

ஒன்றாகச் சேர்ந்து விடயங்களைச் செய்யும் போது ஓர் உணர்வு ரீதியான நம்பிக்கையைப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்குகிறார்கள். வீட்டில் பிள்ளைகளுடன் ஒன்றாகச் சேர்ந்து வாசித்தல் என்பது ஒரு மிகச்சிறந்த வழிமுறையாகும். சொற்களஞ் சியத்தை மாத்திரம் நாம்விருத்திசெய்து கொள்வதுடன் மாத்திரம் அல்லாமல் வாசிப்பில் ஒரு விருப்பத் தினையும் ஏற்படுத்தி விடுகின்றோம். மேலும் சிறுவயதிலிருந்து பொது நூலகங் களுக்குச் சென்று வாசிக்கும் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தரமான புத்தகங்களை வாசிக்கவும் வகுப் பறையில் பெறும் அறிவிலும் பார்க்க மேலதிகமான அறிவினை பெறவும் வழிப்படுத்தப் படுகின்றனர்.

**மிகையான ஒழுங்குபடுத்தல் (Over Scheduling)**

மாணவர்கள் ஆறு மணித்தியாலங்களை பாடசாலையில் செலவழிக்கின்றனர். எனவே பெற்றோர்களே அவர்களது வேலைகளை ஒழுங்குபடுத்தி திட்டமிட்டுக் கொடுக்கின்றார்கள். இது ஆரம்பக்கல்வி கற்றலிலிருந்தே ஆரம்பிக்கின்றது. மேலும் வீட்டுவேலைகள் ஆசிரியர்களால் வழங்கப்படும்பொழுது மாண வர்களுக்கு அவை ஒரு சுமையாகிவிடாது சுகமான முறையில் அமைவதற்கு பெற்றோர்களே சரியான முறையில் அவர் களுக்கு அவற்றை ஒழுங்கமைத்துக் கொடுக்கவேண்டும்.

**மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளும் உளச்சமூக விருத்தியும்**
**(Children's Academic Performance and Psychosocial Competence)**

பொதுவாக ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் ஈடுபாடானது மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளிலும் உளச்சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதற்கு மறுப்புக்கள் ஏதும் இருக்க முடியாது எனக்கருதுகின்றேன். அதேவேளை ஆரம்பக்கல்வியில் பெற்றார்களின் அதிகமான ஈடுபாடு என்பது பிளஸ்ளைகளின் முன்னேற்றத்தில் பாதகமான தாகக் கூடஅமையலாம்.

கொங்ஹொங் நாட்டில் தரம் 3 வகுப்பினைக் கொண்ட 507 பாடசாலைகளின் சீனமாணவர்களிடையே நிகழ்த்தப்பட்ட ஆய்வொன்றிலே வீட்டிலும் பாடசாலைகளிலும் பெற்றோர்களின் ஈடுபாடானது அவர்களது கல்விசார் விருத்தி, உளச்சமூக விருத்தி மற்றும் சுகாதார விருத்தி என்பவற்றிலே தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தமை முற்றிலும் உண்மையெனக் கண்டறியப்பட்டது.

இம்மாணவர்களுக்கு கணிதம் மற்றும் மொழி தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் பேறாக வீட்டுமட்டக் (Home based ) கல்விக்கான பெற்றார் ஈடுபாடானது சாதமாக தொடர்புபடுத்தப்பட்டதைக் காட்டியது. குறிப்பாக மாணவர்களின் மொழித் தேர்ச்சியிலும் உளச்சமூகநலன் விருத்தியிலும் சாதகமான தொடர்பு கிடைத்ததுடன் பாடசாலையுடன் கல்விக்கான பெற்றோர்களின் உயர்மட்ட ஈடுபாடானது அவசியம் எனப்பெறப்பட்டது. அதேவேளை பிள்ளைகளின் சமூக நடத்தைக்கான பாடசாலையுடனான பெற்றோர்களின் ஈடுபாடானது மறைமுகமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது எனக் கண்டறியப்பட்டது. எனவே இவ் ஆய்வின் முடிவின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது சிறப்பாக ஆரம்பக்கல்வியில் வீடுகளில் பெற்றோர்களின் ஈடுபாடனது பிள்ளைகளின் அபிவிருத்தியில் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குகின்றது. பெற்றோர்களின் ஈடுபாடு எதுவென்பதனை மேலும் விளங்கிக் கொள்ளும் பொழுது பிள்ளைகளின் கற்றலிலும் கல்விசார் இலக்குகளை அடைந்து கொள்வதிலும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஈடுபடுவதனையே கல்விக்கான பெற்றோர் ஈடுபாடு எனக்கருத முடியும். பெற்றோர்களின் ஈடுபாடானது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகள் தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அதிபர் ஆசிரியர்கள் பாடசாலையினுள் அழைக்கும் பொழுது அவர்களின் ஈடுபாடானது தவிர்க்க முடியாததும் அவசியமானதுமாகும். பெற்றோர்கள் சிலர் பாடசாலைகளிலும் வீட்டிலும் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பாடசாலை மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றுக்காக தன்னார்வத் தொண்டின் அடிப்படையில் ஈடுபட்டு தம்மை அர்ப்பணிக்கிறார்கள். அவ்வாறே ஆசிரியர்களும் பெற்றோர்களுக்கும் இடம் கொடுத்து அவர்கள் சொல்வதைக் கேட்டும் பிள்ளைகளின் கல்வி நலன்கருதி தேவையான ஆலோசனைகளை வழங்கியும் ஒன்றாகச் சேர்ந்து ஈடுபட்டுக் கொள்கின்றார்கள். அதனடிப்படையில் பார்க்கும் பொழுது இச்சிறந்த அணுகுமுறையானது ஆரம்பக்கல்வியில் நடைபெறுவது சாலச்சிறந்தது எனக்கருதுகின்றேன். ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் பங்குபற்றலும் ஈடுபாடும் அதிகம் சாதாகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எமது நாட்டிலே தரம் ஐந்து (முதன்மை நிலை -3) புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலுக்காக மட்டுமே பெற்றோர்கள் தமது பங்குபற்ற லையும் ஈடுபாட்டையும் வழங்குகின்றார்கள். அதற்கு முன்னரான ஆரம்பக்கல்வி முதன்மை நிலைகளில் அவர்களது ஆர்வம் குன்றியே காணப்படுகின்றது. என்னைப் பொறுத்த வரையில் இவர்களது பங்கு பற்றலும் ஆர்வமும் முதன்மை நிலை ஒன்று (தரம் -1 மற்றும் தரம் -2 ) முதன்மை நிலை இரண்டு (தரம் -3 மற்றும் தரம் -4) ஆகியவற்றிலே மாணவர்களின் கற்றலை மேம்படுத்திக் கொள்வதில் பெற்றோர்களின் முறைமைசார் பங்கு பற்றலும் ஈடுபாடும் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாகப் பெற்றோர்கள் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் பற்றி நன்கு அறிந்திருக்க மாட்டார்கள். மேலும் இலங்கையின் ஆரம்பக்கல்வி பற்றி பெற்றோர்களுக்கு இருக்கின்ற அறிவுப் பஞ்சமே காரணமாகும் எனக் கருதுகின்றேன்.

எடுத்துக்காட்டாக தரம் -1 மற்றும் தரம் -2 மாணவர்களுக்கு பரீட்சையினை நடாத்தக் கோருவது என்பது தவறான அணுகு முறை என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே அத்தியா வசியக் கற்றல்தேர்ச்சி என்றால் என்ன? அவற்றை எவ்வாறு? எப்போது? எம்முறையில் மதிப்பீடு செய்துகொள்வது என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக அறிந்திருக்கமாட்டார்கள். எனவே கல்விப்புல ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக இயலுமானவரையில் விளக்கமளிக்கும் பொழுது அவர்கள் மாணவர்களின் கற்றலில் நாம் எடுக்கும் முயற்சியில் அதிகளவான பங்குபற்றலையும் ஈடுபாட்டையும் உயர்ந்தபட்ச அளவில் பெற்றுக் கொள்ளமுடியும் எனக் கருதுகின்றேன்.

கடந்த 2016ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட ஆய்வொன்றிலே ஆசிரியர் - பெற்றார் உண்மையான மற்றும் வினைத்திறனான இடைத்தொடர்பானது குறைவடைந்து விட்டதாகச் சொல்லப்படுகின்றது. குறிப்பாக பெற்றோர் கூட்டங்களுக்கு பங்கு பற்றுதல் , பாடசாலை செயற்பாடுகளில் பங்கு பற்றுதல் போன்ற ஈடுபாடு குறைவடைந்து விட்டமையானது பாடசாலைகளில் இன்று பல சவால்களை எழுப்பியுள்ளன. எனக் கூறக் கூடியதாகவுள்ளது. பாடசாலைகளில் மற்றும் மாணவர்களின் மாற்றத்திற்கு பின்னால் உள்ள காரணிகள் பன்முகத்தன்மை (multi-faceted) கொண்டதெனலாம். எடுத்துக்காட்டாகக் கூறப்போனால் பாடசாலைகளுக்குச் சென்றால் பெற்றோர்கள் வழிடத்தப்படும் விதம் தாம் கலாசாரம் கல்வி தொடர்பாக குறைந்தளவான விழிப்புணர்வினைக் கொண்டவர்களாகவும் தம்மைப் பிச்சைக்காரர்களாகவும் இன்னும் பல தாழ்ந்த நிலைகளிலும் வைத்துப் பேணுவதாகவும் கருதுவதாக பெற்றோர்கள் எண்ணுகிறார்கள்.

ஆரம்பத்திலேயே ஆசிரியர் - பெற்றார் உறவு பாடசாலைகளில் சிறப்பாகக் கட்டியெழுப்பப்படும் பொழுது பெருமளவில் ஆரம்பக் கல்வி முதல் இடைநிலைக்கல்வி வரை சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே ஆரம்பக்கல்வி அபிவிருத்தியில் பெற்றார்களின் பங்குபற்றலும் ஈடுபாடும் (Parental Involvement and engagement in Primary Education Development) மிகவும் அத்தியாவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம்

(கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து.)

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கவனப்படுத்தும் சமூக, கலாசார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண் பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப் படுவதுண்டு. பெண்ணியத்தை வரையறுப்ப தென்பதே கூட சிக்கலானதாக இருப்பதுண்டு.

சமத்துவமின்மையின் மூலங்கள், சமத்துவத்தை அடைவதற் கான வழிமுறைகள், பால் மற்றும் பால்நிலை அடையாளங்களை விமர்சிப்பது, கேள்விக்குட்படுத்துவதற்கான எல்லைகள் போன்றன தொடர்பில் பெண்ணியவாதிகளிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. பால் அடையாளங்களான ஆண் - பெண் போன்றவை வெறுமனே சமூகத்தால் கட்டமைக்கப்பட்டவையே என்ற வாதங்களும் உள்ளன.

தற்காலப் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன, சமூக, கலாசார, மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமா கக் கருதுகின்றனர்.

Feminism என்னும் ஆங்கிலச் சொல் Femina எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

'பெண்ணியம்' என்ற சொல் நடப்பில் நிலைபெற்று விட்டது என்பதாலும், கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக உள்ளதாலும் பெமினிசம் என்கிற ஆங்கிலச் சொல்லின் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைச் சொல்லாக இது வழங்கப்பட்டு வருகிறது. பெமினிசம் என்பதற்கு பெண்ணியம் என்பதே பொருத்தமான கலைச் சொல்லாகும்

## பெண்ணியம்-கருத்து விளக்கம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும்.அதன்மூலம் உலகளவில் அரசியல், பண்பாடு, பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும். சார்லட் பன்ச் என்பவர், "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்" என்று எடுத்துரைப்பார்.

தெற்காசிய நாடுகள், பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது

## பெண்ணியத்தின் தோற்ற வளர்ச்சி

தொடக்கக் காலத்தில் மனித குலம் தாய்வழிச் சமூகமாக இருந்துள்ளது. பெண்ணே குடும்பத்தை வழி நடத்தித் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கின்றாள். இவை மானுடவியல் ஆய்வாளர்களின் கருத்துக்களாக உள்ளன. பின்னர், பல்வேறு சமூக மாற்றத்தால் தாய்வழிச் சமூகம் வீழ்ச்சி கண்டது. நாடெங்கிலும் பெண் கொடுமைகளுக்கு ஆட்பட்டாள். சீனாவில் பெண்கள் வீட்டைவிட்டு ஓடிவிடாமலிருக்க இளம் வயதிலேயே காலை மடக்கி முடமாக்கிவிடுவதாகக் கூறப்படுகிறது. அந்தந்த நாட்டின் சூழலுக்கேற்ப பெண் சமுதாயம் பல கொடுமைகளை அனுபவித்தது. இவ்வகையான பெண்ணின கொடுமைகளுக்கு எதிராக, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகெங்கிலும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. 1885 ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காசிம் அமீன் என்பவர் புதுமைப்பெண் (THE NEW WOMAN) என்றொரு நூலை எழுதினார். இந்நூல் மனித சமுதாயத்தில் ஒருவித விழிப்புணர்வைத் தோற்றுவித்தது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த சிமோன் டி பேவர் இரண்டாவது பாலினம் (The Second Sex:1949) என்ற நூலை எழுதினார். இந்த நூலை முன்னோடியாகக் கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது.

1871இல் பிரான்சில் பெமினிசம் என்ற சொல் அறிமுகப்படுத்தப் படுகிறது. 1872இல் அலெக்சாண்டர் டூமஸ் பில்ஸ் என்ற பிரெஞ்சு எழுத்தாளர், பெண்கள் ஆண்களால் வழிநடத்தப் படுகிறார்கள் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

1840இல் பெண்களின் உரிமைக்கான இயக்கம் தொடங்கப் பட்டது. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்தான் பெண்ணின் இருப்பு நிலை குறித்த அடைமொழி, பண்பு சார்ந்து தங்களைத் தாங்களே பேசிக்கொள்வதும், சமூக பொருளாதார நிலைகுறித்த கேள்விகள் தொடர்ந்து தீவிரமாகச் சிந்திக்கப்பட்டன.

இந்தியாவில் "பெண்ணியம்" என்ற சொல் 1960க்குப் பிறகே அதிகமாகப் பேசப்பட்டது

'பெண்ணியம்' ஆணுக்கு எதிரானது அன்று. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாகும். பெண்ணியத்தின் தளம் விரிந்து பரந்தது. பெண்ணியவாதிகளால் குறிப்பிடப் பெறும் கருத்தாக்கங்கள் பலவுண்டு. இவர்கள் உடல், உள ரீதியில் அடக்கப் பட்ட பெண்ணின் சமூகப் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளப் பயன்படும் பெண்ணியக் கருத்தாக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

"பண்பாட்டுக் கட்டமைப்பு ,தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகம், பாலியல் பணிவேறுபாடு, பாலியல் அரசியல், அதிகாரம், விடுதலை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட ஊரக அமைப்புகள்
# 2ஆம் பாகம்.

திரு.க.ஜீவரூபன்,
ஆசிரியர், பாரதிபுரம்., மூதூர்.

1.கிராம அபிவிருத்திச் சங்கம்:

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் (Rural Development Societies- RDS)மாகாண அரசுகளின் நிருவாகத்தின் கீழ் இயங்குகின்றன. இவற்றினை நெறிப்படுத்துவதற்காக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (Rural Development Officers-RDO) உள்ளனர். இவர்களது கல்வித் தகைமை பட்டதாரிகளாகும். ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிற்கும் ஒரு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையினால் சில உத்தியோகத்தர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுகளில் பணியாற்ற வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளும் பரந்து விரிந்த நிலப்பரப்புகளால் எல்லையிடப்பட்ட பிரதேசங்களாக இருப்ப தனால் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கிராம அபிவிருத்திச் சங்கங்களை சரியான வழியில் நெறிப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது.

நிருவாக நடைமுறையும் முரண்நிலை கொண்டதாக காணப்படுகிறது. மாகாண அரசுகளின் திணைக்களங்களினது உத்தியோகத்தர்களான கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் பிரதச செயலகங்களிலேயே தமது பணிகளுக்காக இணைக்கப் பட்டுள்ளனர். மத்திய அரசின் பிரதிநிதியான பிரதேச செயலாளரின் (Divisional Secretary-DS) அறிவுறுத்தல்களின் அடிப்படையிலேயே இயங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு இல்லையெனினும் நடைமுறையில் பிரதேச செயலாளர்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் மீறி வைத்திருக்கின்றார்கள்.

கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் கூட இவ்விடயத்தில் தலையிட்டு கிராம அபவிருத்தி உத்தியோகத்தர்களது பணிகளை ஆற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களமானது கிராம அபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகளில் பிரதேச செயலாளரது தலையீட்டினை இல்லாது செய்கின்ற வகையில் சுற்றுநிருபங்களை அனுப்பி மாகாண சபைகளிற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். அப்போதுதான் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தன்னிலையாகச் செயற்பட முடியும்.

தற்போது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நிர்மாண வேலைகளில் கையெழுத்திட்டு அவ்வேலைத் திட்டங்களை வேறு நபர்களுக்கு உப ஒப்பந்த அடிப்படையில் வழங்கி மதிப்பீட்டுத் தொகையின் 5 வீதமான தொகையினைப் பெறுகின்ற செயற்பாடுகளே நடைமுறையில் உள்ளன. சங்கங்களுக்கு வருமானம் வருகின்ற செயற்பாடாக இது கூறப்படுகின்றது. ஆனால் ஒப்பந்தத்திலே உப ஒப்பந்தம் கொடுக்கப்படலாகாது என தெரிவிக்கப்பட்டிருந்தாலும் கூட நடைமுறையில் முரண் நிலையே காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தன்னிலையாகச் செயற்படுகின்ற நிலை மாகாணப் பணிப்பாளர்களினால் உருவாக்கப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அனைத்தும் ஊரின் நலனில் அக்கறையுடன் நலத் திட்டங்களை வகுத்து செயற்படுகின்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட மாதிரி துணை விதிகளையே கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அனைத்துமே தமது துணைவிதிகளாக பேணுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தமது ஊருக்கு ஏற்ற வகையான துணைவிதிகளை உருவாக்கி அதனடிப்படையில் செயற்பட வேண்டும் என்ற வழிகாட்டல் திணைக்களத்தினால் உத்தியோ கத்தர்கள் ஊடாக வழங்கப்பட வேண்டும்.

(தொடரும்)

லெஸ்னி ரேடர்ஸ்



புத்தகங்கள்,
அப்பியாசக் கொப்பிகள்,
பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக உபகரணங்கள்,
போட்டோ பிரதிகள்

60, இராஜவரோதயம் தெரு,
திருக்கோணமலை

026 2223222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிடான காதில் சங்கு ஊதினாலென்ன?.....

கதிர்.திருச்செல்வம்,
பொற்கேணி, தம்பலகமம

'இஞ்சேருங்க...இஞ்சேருங்க...'
'எங்கடா போய்த் தொலைஞ்சிது இந்தாள்..' அழைத்து அலுத்துக் கொண்டவளாக வீட்டு முற்றத்தினைக் கூட்டிப் பெருக்கிக்கொண்டு நின்ற வெள்ளையம்மா முற்றத்தை பெருக்குவதை நிறுத்திக்கொண்டு விளக்குமாறை வீட்டுச் சுவரில் தாங்கலாக வைத்துவிட்டு வாளியில் இருந்த நீரில் கைகளைக் கழுவிக் கொண்டு வீட்டினுள் ஓடினாள்.

வீட்டு விறாந்தையில் இருந்த சாய்மனைக் கட்டிலில் ஒய்யாரமாக படுத்தக் கொண்டு கைப்பேசியை கையில் வைத்துக்கொண்டு காதுகளிலே அதன் ஒலிபரப்பிகளைச் செருகிக் கொண்டு இருந்த துணைவர் தமிழ்வேந்தனைக் கண்டவுடன் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

துணைவர் அருகில் சென்றவள் காதில் செருகியிருந்த இரண்டையும் வந்த வேகத்தில் வெளியே இழுத்துக் கழற்றியவள் ' என்ன வருத்தம் வந்து தொலையப் போகுதே தெரியாது உங்களுக்கு. எத்தன தரம் கூப்பிட்டிருப்பன். குத்துக்கல்லுமாரி படுத்துக்கிடக்கிறீங்க என' பொரிந்தாள் துணைவி.

உண்மையில் தமிழ்வேந்தனுக்கு எதுவும் கேட்கவில்லை. சூரியன் பண்பலையில் பாலசுப்பிரமணியம் பாடிய பாடலை இரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தவருக்கு எப்படி துணைவி அழைத்தது கேட்கும்.?

துணைவியின் கோபம் வார்த்தையில் அனலாகப் பறந்ததை கண்டவர் மனதில் பயந்துதான் போனார்.

'அடுப்பில் சோறு வைத்திருக்கிறன். பத்து நிமையங்களில் அடுப்பைக் குறைத்து விடுங்கள். எனக்கு வேலைக்குப் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் போகுது.' என தமிழ்வேந்தனுக்கு விளங்கும் வகையில் தெளிவாகக் கூறியே முற்றத்தினை பெருக்கச் சென்றிருந்தார் துணைவியான ஆசிரியர் வெள்ளையம்மா.

கைப்பேசி கையில் இருந்தால் யார் என்ன கூறினாலும் நினைவில் இருக்கவா போகிறது.? அல்லது ஏதாவது விளங்கத்தான் போகிறதா? அல்லது யாராவது அழைத்தால் கேட்கத்தான் போகிறதா?

ஓடிப்போய் அடுப்பைக் குறைத்தார் வெள்ளையம்மா. அரிசி கருகி கருகிய அரிசியின் வாசனை மூக்கை அரித்தது. அடுப்பைக் குறைக்கச் சொல்லி இருபது நிமையங்கள் ஆகியிருந்தது.

துணைவியின் பின்னால் சென்ற தமிழ்வேந்தன் அசடு வழிந்து போய் துணைவியின் பின்னால் நின்றார். அவர் இவ்வாறான பிழை செய்வது இதுதான் முதல் தடவையில்லை. துணைவியின் வாயால் ஏச்சு வாங்காமல் இருந்த நாட்கள் தற்போதெல்லாம் குறைந்து விட்டன.

தமிழ்வேந்தனுக்கு நிமையத்திற்கு ஒரு தடைவை கைப்பேசியைப் பார்க்காமல் இருக்கவும் முடிவதில்லை. கைப்பேசியில் அடிக்கடி 'டிங்' சத்தம் வரும். முகநூலிலோ வேறு சமூக வலைத்தளங்களிலோ தன் நண்பர்களிடமிருந்து செய்திகள் வரும் போதெல்லாம் உடனுக்கு உடன் அவற்றைப் பாரத்து தேவையானவற்றிற்கு பதிலும் வழங்கும் உயர் பண்பு தமிழ்வேந்தனிடம் இருந்தது.

நண்பர்களிடம் நிமையம், மணி என நேர அளவிடை பாராது பேசுவார். ஆனால் வீட்டில் உள்ள துணைவியிடமோ அல்லது அவரது பிள்ளைகளிடமோ பேசமாட்டார். பேசவும் அவருக்குத் தோணுவதும் இல்லை.

காலம் தமிழ்வேந்தனை அப்படி மாற்றிவிட்டது என்பதை விட கைப்பேசி அவரை மாற்றி தனக்கு அடிமையாக்கி விட்டது என்பதே உண்மையாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் நித்திரைவிட்டு எழுந்தவுடன் முதல்நாள் படுக்கைக்குப் போகும் போது மின்னேற்றத்தில் போட்டிருந்த கைப்பேசியை எடுத்துப் பார்த்த பின்பே அடுத்த வேலையைச் செய்வார். அப்படிச் செய்யாது விட்டால் அவரது மனதிற்குத் திருப்தியாக இருக்காது.

சில நேரங்களில் முகநூலிலே ஏதாவது பதிவுகளைப் போடுவார். அப்பதிவுகளுக்கு வருகின்ற விருப்புகளை ஒவ்வொன்றும் வரும் போது யார் போடுகின்றார்கள் என்பதைப் பார்ப்பார். பாரத்து மகிழ்வார். சிலர் கருத்திடுவார்கள். அவர்களுக்கு பதிலளிப்பார்.

இப்படியான பண்புகளை வளர்ந்துக் கொண்ட தமிழ்வேந்தன். 'கைப்பேசிவேந்தன்' என்ற பிள்ளைகளின் பட்டப் பெயருக்குச் சொந்தக்காரர் ஆனார்

'இண்டைக்கு தீஞ்ச சோத்த தின்னுங்க. இப்பிடித் திண்டாத்தான் உங்களுக்கு புத்தி வரும்' தொடர்ந்து ஆதத்திரத்தில் பொரிந்தார் வெள்ளையம்மா.

துணைவியார் சொல்வதில் தவறில்லை என்பதை மனதால் ஏற்றுக் கொண்டவர் 'இனி கைப்பேசி பாவிக்கிறத் குறைச்சாத்தான் சரி' என தனக்குத் தானே முடிவெடுத்துக் கொண்டார். கைப்பேசியை மேசையிலே வைத்து விட்டு வந்துவிட்டார்.

அவரது முடிவை நல்லவேளையாக யாருடனும் பகிர்ந்து கொள்ளவில்லை. அவர் முடிவெடுத்து சரியாக ஏழு நிமையத்தில் அவரது பள்ளித் தோழன் மயில்வாகனன் அழைப்பு எடுத்தான். கைப்பேசியைக் காதில் வைக்கும் போது துணைவி அவசர அவசரமாக குளித்து விட்டு வரும்போது பார்த்து முறைத்துவிட்டுப் போனார். 'இண்டைக்கு நமக்கு சனி மூஞ்சில போல' என மீண்டும் தனக்குத் தானே மீண்டும் கூறிக் கொண்டார்.

மயில்வாகனத்துடன் கதைத்துவிட்டு மீண்டும் முகநூலுக்குள் புகுந்து விட்டார்.

வெள்யைம்மா சேலை உடுத்ததும் உடுக்காததுமா தனது உந்துருளியை எடுத்தக் கொண்டு புறப்பட்டார். வாசலில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரத்த சத்தமாக தான் பள்ளிவிட்டு வருவதற்கிடையில் செய்ய வேண்டியவற்றை துணைவரிடம் கூறிச்சென்றார்.

ஆனால் வெள்ளையம்மாவின் வார்த்தைகள் அனைத்தும் கைப்பேசியைக் கையில் வைத்திருந்த தமிழ்வேந்தனிற்கு 'செவிடன் காதில் ஊதிய சங்கேயானது.'

**பாடசாலைத் தவணைகள்**

இரண்டாம் தவணை விடுமுறை
10.10.2020 தொடக்கம் 08.11.2020 வரை
மூன்றாம் தவணை விடுமுறை
24.12.2020 தொடக்கம் 01.01.2021 வரை
அடுத்த ஆண்டு முதலாம் தவணை ஆரம்பம்
04.01.2021

மூன்றாம் நபர்காப்புறுதிக் கட்டணங்கள் ஒப்பீட்டுப் பார்வை

| தொ இல | காப்புறுதி நிறுவனம் | உந்துருளி | மகிழுர்ந்து |
|---|---|---|---|
| 01 | தேசிய காப்புறுதி(கச்சேரி) | உருபா.408.50 | உருபா.463.00 |
| 02 | கூட்டுறவுக் காப்புறுதி | உருபா.580.00 | உருபா.1250.00 |
| 03 | சிலிங்கோ காப்புறுதி | உருபா.950.00 | உருபா.2650.00 |
| 04 | ஏலையன்ஸ் காப்புறுதி | உருபா.850.00 | உருபா.1000.00 |
| 5 | பேயார் பெஸ்ட் காப்புறுதி | உருபா.782.00 | உருபா.1012.00 |
| 06 | இலங்கை காப்புறுதி கூட்டுதாபனம். | உருபா.593.74 | உருபா.1176.62 |
| 07 | கொன்ரினென்ரல் காப்புறுதி | உருபா.602.00 | உருபா.1200.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் அரச ஊழியர்களும் பிரசவ விடுப்பும்

மாணிக்கம் இளங்கோ (BEd.MEd),
அதிபர் - தி/மூ/சண்பகவல்லி வித்தியாலயம்.

அரச பணியாளராகப் பணிபுரியும் பெண்ணொருவர். குழந்தையை பெற்றெடுப்பதன் பேரில் அவருக்காக பிரசவ விடுப்பு அனுமதிக்கப்படுகிறது.

பிரசவ விடுப்பானது நிரந்தர, தற்காலிக, சமயோசித, பயிலுனர் ஆகிய அனைவருக்கும் உரித்துடையது. குழந்தை பிறந்த நாளிலிருந்தே பிரசவ விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. பிரசவத்திற்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டபோதும் பிரசவம் நடைபெறும் காலம் வரை தனது சொந்த விடுப்பையே பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிரசவ விடுப்பின் சில அடிப்படை நடைமுறைகள்

- பிரசவம் நிகழ்ந்து நான்கு வாரங்களுக்கு முன்னர் பணியாளர் கடமைக்குத் திரும்ப முடியாது.
- பிரசவம் நிகழ்ந்த முதல் எண்பத்திநாலு(84)வேலை நாட்களும் முழுச்சம்பளத்துடனான சிறப்பு விடுப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.(கஷ்ட,அதிகஷ்டப் பிரதேச கொடுப்பனவு நீங்கலாக)
- பிரசவ விடுப்பை முறைப்படி பெறுவதற்கு விண்ணப்பப் படிவத்துடன் பிரசவம் நிகழ்ந்ததிற்கான மருத்துவச் சான்றிதழ் அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை கோரிக்கைக் கடிதத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- பிறக்கும்போது சாவடைந்த அல்லது சாவடைந்த குழந் தையைப் பெற்றெடுத்தால் அல்லது ஆறு வாரங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் குழந்தை சாவடைந்தால் பிரசவ நாளிலிருந்து ஆறு வாரங்கள் மாத்திரமே சம்பளத்துடனான விடுப்பு அனுமதிக்கப்படுகிறது.

அரைச்சம்பள பிரசவ விடுப்பு

- எண்பத்திநாலு(84) நாட்கள் (வேலைநாட்கள்) பிரசவ விடுப்பைப் பெற்றுக் கொண்ட பணியாளர் ஒருவர். குழந்தையைப் பராமரிப்பதற்காக மேலும் விடுப்புத் தேவைப்படின் எண்பத்திநாலு(84) நாட்கள் அரைச்சம்பள விடுப்பிற்காக விண்ணப்பிக்க முடியும்.

- இவ்வெண்பத்திநாலு(84) நாட்கள். சனி ஞாயிறு, அரச பொதுவிடுமுறை உள்ளடங்கியதாகவே கணிக்கப்படும்.

- இரண்டாவது அரைச்சம்பள விடுப்பு முற்றுப்பெற்றதன் பின்னர் மேலும் எண்பத்திநாலு(84) நாட்கள் சம்பளமற்ற விடுப்பிற்காக விண்ணப்பிக்க முடியும்.

- அரைச்சம்பளத்துடனான எண்பத்திநாலு(84) நாட்களும். சம்பளமற்ற எண்பத்திநாலு(84) நாட்கள் விடுப்பைப் பெற்றுக்கொள்வதாயின் முன்னைய பிரசவ விடுப்பு முடியும் முன்னர் அதிபரின் சிபார்சுடன் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். முழுச் சம்பளத்துடனான விடுப்பு தவிர்ந்த ஏனைய விடுப்புகளை அனுமதிப்பதன் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் என அதிபர் கருதினால் விடுப்பிற்கான சிபார்சினைத் தவிர்த்து விடுப்பு அனுமதியை மறுக்க முடியும்.

- அரைச்சம்பள, சம்பளமற்ற பிரசவவிடுப்புக் காலகட்டத்தில் குழந்தை சாவடைந்தால் அந்நாளிலிருந்து ஏழு(07) நாட்களுடன் விடுப்பு இரத்தாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ அரைச்சம்பள அல்லது சம்பளமற்ற விடுப்பைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர் வலயக்கல்வி பணிப்பாள ருக்கு அறிவித்த பின்னர் விடுப்பை முறித்துக்கொண்டு பாடசாலைக்குத் திரும்ப முடியும்.

➢ சம்பளத்துடன் எண்பத்திநாலு(84) நாட்கள் பிரசவ விடுப்பை பெற்றவர் ஒரு மாத காலத்தின் பின்னர். விரும்பினால் பணிக்குச் சமூகமளிக்க முடியும்.

எவ்வாறாயினும் பணிக்குச் சமூகமளித்த ஒருவர் மீண்டும் விடுப்புச் சலுகையை அனுபவிக்க முடியாது.

**பெண் ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்ட சலுகை**

பொது நிருவாகச் சுற்றறிக்கை 4/2005 க்கு அமைவாக

❖ கர்ப்பமுற்ற காலம் ஐந்து(05) மாதங்கள் கடந்த பின்னர். பணி நிலையத்திற்கு கடமைக்காக அரைமணித்தி யாலம் தாமதமாகி வரவும். பணி நிலையத்திலிருந்து அரை மணித்தியாலம் முன்னதாகவும் புறப்படவும் முடியும்.

❖ சம்பளத்துடன் பிரசவ விடுப்பை அனுபவித்த ஒருவர் ஏனைய அரைச் சம்பள, சம்பளமற்ற விடுப்பைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில் குழந்தைக்குப் பாலூட்டுவதற்காக பணி நிலையத்திலிருந்து ஒரு மணித்தியாலம் முன்னதாகப் புறப்பட முடியும் (ஆறுமாதம் பூர்த்தியடையும் வரை)


எனினும் இவ்விரண்டு சலுகைகளும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்க முடியாதென கல்வி அமைச்சின் 2007.07.20 ஆம் நாள் ED/2/29/10/20/30 ஆம் எண் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இந் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் எந்த அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட நூல்கள் - திங்களொரு நூல் அறிமுகம்



நூல்: இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று.

நூலரசிரியர்: திரு.சூசை எட்வேட்

திரு சூசை எட்வேட் அவர்கள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பாக வெளி வந்திருக்கிறது. வாசிப்பவர்களை புத்தகத்துடன் கட்டிப் போடும் திறன் புத்தகத்தை வாசிக்கும் போது புலப்படுகிறது. அருமையான பதினாறு சிறுகதைகளை தொகுத்து 'இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று' என்ற பெயரில் இச்சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன.

வாசிப்பு குறைந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இவ்வாறான ஒரு நூல் தமிழ் வாசிப்பவர்களுக்கு நல்ல தீனி போடுகின்ற ஒரு புத்தகமாக அமைகின்றது. கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்நூலை வெளியிட்டிருக்கிறது.

கடந்த 26.09.2020 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை திருக்கோணமலை நூலக மண்டபத்தில் வெளியீடு நடைபெற்றது. காலத்திற்குப் பொருத்தமான ஒரு நூல் வெளியிடப் பட்டிருப்பதனை மகிழ்வுடன் வரவேற்கும் 'நம்மட முற்றம்' நூல் ஆசிரியர் திரு.சூசை எட்வேட் அவர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் மகிழ்சியடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பொருளாதாரத்தின் இளமைக்காலம் - 02.

அ.அனிக்கின்
(நன்றி: வினவு.)

## மூன்று நூற்றாண்டுகள்

பொருளாதார அறிஞர்களின் கருத்துக்கள் தங்கள் நாடுகளின் சமூக மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சி மட்டத்தினால் மிகப் பெரிய அளவுக்கு நிர்ணயிக்கப்படுகின்றன.

பதினேழாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை அரசியல் பொருளாதாரத்தின் முன்னேற்றம் ஒரு புதிய சமூக அமைப்பின் வளர்ச்சியினால், அதாவது அந்த சமயத்தில் முற்போக்குடையதாக இருந்த முதலாளித்துவம் என்ற சமூக அமைப்பினால் முன்நிர்ணயம் செய்யப்பட்டது. சிறந்த திறமையும் சக்தி மிக்க ஆளுமையும் கொண்ட நபர்கள் மாபெரும் சிந்தனையாளர்களாகத் தோண்றினார்கள்.

மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்கள் ஒன்று சேர்ந்திருக்கும் ஒரு காட்சியை நாம் ஒரு வினாடி கற்பனை செய்து பார்ப்போம். அவர்களிடம் எவ்வளவு வேறுபாடுகளைக் காண்கிறோம்!

அவர்களில் பெரும்பாலானவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர் கள். ஆனால் பிரெஞ்சுக்காரர்களும் ஓரளவுக்கு இருக்கிறார் கள். இது ஆச்சரியமல்ல. அன்று இங்கிலாந்து முன்னணியி லிருந்த முதலாளித்துவ நாடு மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் கூட அரசியல் பொருளாதாரம் என்பது மிகவும் அதிகமான அளவுக்கு இங்கிலாந்தின் விஞ்ஞானமாகவே கருதப்பட்டது. பிரான்சிலும் கூட மற்ற நாடுகளைக் காட்டிலும் சீக்கிரமாகவே முதலாளித்துவம் வளர்ச்சியடைய ஆரம்பித்த்து. 'அரசியல் பொருளாதாரம்' என்ற வார்த்தையே முதலில் பிரெஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில்தான் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்களில் அமெரிக்கர்கள் குறைவாகவே இருக்கிறார்கள் ஆனால் அறிவுசான்ற மேதையான பிராங்கிளின் அவர்களில் ஒருவர்.

முதல் பொருளாதார நிபுணர்கள் மார்க்சின் வார்த்தைகளில் "தொழில் செய்பவர்களும் இராஜீயவாதிகளுமாக" இருந்தது வழக்கமானதே. பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் அரசு நிர்வாகத்தின் செய்முறைத் தேவைகளே பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்குமாறு அவர்களைத் தூண்டின.

அங்கே ஷேக்ஸ்பியரின் சமகாலத்தவர்கள் இருக்கிறார்கள். நீண்ட தலை முடியோடு சரிகை உடையணிந்த பெருந்தகை யினரையும் கச்சிதமாகவும் கண்ணியமாகவும் உடையணிந்த, முதலாளித்துவத் திரட்டலின் ஆரம்பக் காலத்தைச் சேர்ந்த வியாபாரிகளையும் பார்க்கிறோம். இவர்கள் அரசர்களுக்கு ஆலோசனை சொல்கின்றவர்கள் வாணிப ஊக்கக் கொள்கையினரான மான்கிரெட்டியேன், தாமஸ்மான் ஆகியோர்.



மான்கிரெட்டியேன் (வலது) ஜார்ஜ் வாக்கர் மற்றும் வில்லியம் லெவிஸ் (இடது)

இன்னொரு குழு, இவர்கள் மூலச் சிறப்புடைய அரசியல் பொருளாதாரத்தைத் தோற்றுவித்தவர்களான பெட்டி, புவாகில்பேர் மற்றும் ஆடம் ஸ்மித்தின் இதர முன்னோடிகள். தலையில் பெரிய டோபாவும் நீண்ட கோட்டும் உள்ளே திருப்பிவிடப்பட்ட அகன்ற கைகளும் கொண்ட உடைகளை அணிந்திருக்கிறார்கள். இவர்கள் தொழில்முறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பொருளாதாரத்தில் ஈடுபடவில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு தொழில் இன்னும் தோன்றவில்லை.

பெட்டி – ஒரு மருத்துவர். தோல்வியடைந்த அரசியல்வாதி. புவாகில்பேர் -ஒரு நீதிபதி. கான்டில்லான் – ஒரு வங்கி முதலாளி. லாக் – ஒரு பிரபலமான தத்துவஞானி. அவர்கள் அரசர்களிடமும் அரசாங்கங்களிடமும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள். இப்பொழுது அறிவு வளர்ச்சிபெற்று வருகின்ற பொதுமக்களுக்காகவும் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் இந்தப் புதிய விஞ்ஞானத்தைப் பற்றிய தத்துவப் பிரச்சினைகளை முதல் தடவையாக எழுப்புகிறார்கள். இவர்களில் பெட்டி குறிப்பிடத்தக்கவர். அவர் சிறந்த சிந்தனை யாளர் மட்டுமல்ல் தெளிவும் முனைப்பும் கொண்ட தற்சிந்தனையாளர்.



இதோ சுறுசுறுப்புமிக்க ஜான் லோ. இவர் திட்டங்கள் தயாரிப்பதில் நிபுணர் வீர சாகசக்காரர் காகிதப் பணம் வெளியிடலாம் என்பதை முதலில் " கண்டுபிடித்தவர்" பணவீக் கத்தின் முதல் தத்துவாசிரியர் மட்டுமல்ல, அதை நடைமுறையில் பிரயோகித்தவர். லோவின் முன்னேற்றமும் வீழ்ச்சியும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு வரலாற்றின் உயிர்க்களை ததும்பும் பக்கங்களில் ஒன்றாகும்.

மோலியேர் அல்லது ஸ்விப்டின் படங்களில் நாம் காண்பது போன்ற பெரிய டோபாக்களுக்கு பதிலாகக் குட்டையான, முகப் பூச்சு தடவிய டோபாக்களைப் பார்க்கிறோம். இவற்றில் நெற்றியின் மீது இரண்டு முடிச்சுருள்கள் தொங்குகின்றன. பின்னங்காற் சதைகளை வெண்மையான பட்டுக் காலுறைகள் மூடியிருக்கின்றன. இவர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பகுதியிலிருந்த பிரெஞ்சுப் பொருளாதார நிபுணர்களான பிஸியோகிராட்டுகள், அறிவியக்கத்தின் மாபெரும் தத்துவஞானிகளின் நண்பர்கள். பிரான்சுவா கெனே அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர். அவர் தொழிலால் மருத்துவர். விருப்பத்தினால் பொருளாதார நிபுணர். இன்னொரு சிறந்த அறிஞர் டியுர்கோ புரட்சிக்கு முந்திய பிரான்சின் மிகச்சிறந்த முற்போக்கான அரசியல்வாதிகளில் ஒருவர். (தொடரும்..)

## பறவைகள்



### ஈப்பிடிப்பான்

ஈப்பிடிப்பான் பெரும்பாலும் ஊர்க்குருவி அல்லது புல்புல் என்னும் கொண்டைக்குருவி (கொண்டைக் கிளாந்) அளவிலுள்ள சிறு பறவை இனமாகும். இவற்றின் அலகு சிறிய தாகவும் அதேவேளை அகலமாகவும், அடி அழுந்தியும், நுனிமுனை கொக்கிப்போல வளைந்தும் இருக்கும். ஈ, சுள்ளான், நுளம்பு, ஈசல், விட்டில் முதலிய சிறு பூச்சிகளே இவற்றிற்கு முக்கியமான இரை. மரத்தின் மேற்கிளைகளிலோ, தந்திக்கம்பி முதலியவற்றின் மேலோ, நிமிர்ந்து இருந்து, பூச்சியைக் கண்டவுடன் திடீரெனப் பாய்வது போலப் பறந்து போய்ப் பற்றும். பூச்சி தப்பித்துக் கொள்ள முயன்று இங்குமங்கும் பாய்ச்சல் காட்டிச் சுழலுமானால், அதற்கேற்றவாறு இப்பறவையும் தக்கவாறு திரும்பியும், சுழன்றும், கரணம் போட்டும், அவற்றைப் பிடிக்க முயலும் திறமை அதிசயமாக இருக்கும். இரையைப் பிடித்துக்கொண்டு திரும்பத் தானிருந்த இடத்திற்கு வந்து அமர்ந்து இரையை உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பகுதி : 02

விமானம் கடத்தப்பட்டதால் விமானிகள், மற்றும் விமானத்திற்குள் இருந்தவர்கள், அந்தந்த நாட்டின் அதிகாரிகள் முதல் மேல்மட்ட ஆள்கின்றவர்கள் வரையிலும் படப்படப்போடு தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்காக காத்துக் கொண்டு இருந்தார்கள். தீவிரவாதிகளோ மனதிற்குள் பல யோசனைகளோடு இருந்தாலும், வெளியில் எதுவும் பேசாது எரிபொருள் நிரப்பும் பணியை கவனித்துக்கொண்டு இருந்தார்கள்.

விமானத்திற்குள் ::

இதற்கிடையில், விமானத்திற்குள் கடத்தப்பட்ட பயணிகளில் இளம் பெண் ஒருவர் தான் கர்ப்பமுற்று இருப்பதாகத் தெரிவித்து, தனக்கு இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை என்று கூறினார். அதையடுத்து மயக்கமாகி சீட்டில் சரிந்தார்.

கடத்தல்காரர்கள் தமக்குள் ஆலோசனை செய்தபின் அந்த இளம்பெண்ணை மாத்திரம் பென்காசியில் வைத்து விடுவிக்கச் சம்மதித்தனர். இப்படியாக பணயக் கைதிகளில் முதலாவதாக இந்த இளம்பெண் விடுவிக்கப்பட்டார்.

சரி."விமானத்துக்கு உள்ளே ஒரு நாடகம் நடைபெற்றது" என்று இந்தச் சம்பவத்தை ஏன் குறிப்பிட்டோம் என்று யோசிக்கிறீர்களா? காரணம் இருக்கிறது. விடுவிக்கப்பட்ட அந்த இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் உண்மையில் கர்ப்பிணி அல்ல. சும்மா பொய் சொல்லித் தப்பித்துக் கொண்டார்!

இஸ்ரேல் நாட்டிற்குள்
பென்காசி விமான நிலையத்தில் அனுமதி கோரி, அங்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்த அதே வேளையில், பரபரப்பான சூழலில் தீவிரவாதிகளின் கோரிக்கைகள் என்னவாக இருக்குமோ என்றும், விமானத்தில் பயணிக்கும் பயணிகளின் உறவினர்களை சமாதானப்படுத்த ஒரு வேகமான பொறிமுறை அமைக்கப்பட தேவையான ஒழுங்குகள் நடந்துக் கொண்டிருந்தது. கடத்தப்பட்ட விமானம் எரிபொருள் நிரப்புவதால், அதன் பயணம் இன்னும் தொடருமா அல்லது ஒரு வேளை அது மீண்டும் தன் நாட்டுக்குள்வர வாய்ப்புண்டு என்று கருதி, அந்த நாட்டின் Ben Gurion விமான நிலையத்தினை அந்த நாட்டின் ராணுவம் பொறுப்பு எடுத்தது.. அந்த குட்டி நாடு தான் இஸ்ரேல். அந்த நாட்டின் ராணுவ அமைப்பு தான் (**IDF**) ஆகும்.

பெங்காசியில் இருந்த ஓர் உள்ளூர் பலஸ்தீனிய பிரமுகர் விமானத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார் தீவிரவாதிகளால். அந்த பிரமுகர் அழைக்கப்பட்ட தகவலை அறிந்தவுடனேயே, விமானத்தை கடத்தியவர்கள் யார் என இஸ்ரேல் புரிந்து கொண்டது. எண்ணெய் நிரப்பிக்கொண்டு அன்று இரவு 9:50 மணிக்கு விமானம் கிளம்பியது.

எரிபொருள் நிரப்பப்பட்ட விமானம் பென்காசி விமான நிலையத்திலிருந்து கிளம்பிய போதுதான் கடத்தியவர்கள் முதலாவது சிக்கலைச் சந்தித்தார்கள்.

கடத்தற்காரர்களின் திட்டம் என்னவென்றால் ஏதென்ஸ் விமான நிலையத்தை விட்டுக் கிளம்பியவுடன் விமானம் கடத்தப்படவேண்டும். அங்கிருந்து பென்காசி சென்று எரிபொருள் நிரப்பவேண்டும். அதன்பின்னர் சூடான் நாட்டின் கார்ட்டூம் விமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்துக்கு விமானத்தைச் சொலுத்திச் சென்று அங்கே தரையிறங்க வேண்டும்.

இந்தக் கடைசிப் பகுதியில்தான் சிக்கல்.

.விமானம் கிளம்பியபோது விமானியிடம் கார்ட்டூம் விமான நிலையம் நோக்கிச் செல்லும்படி கடத்தியவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். விமானமும் அந்தத் திசையில் செலுத்தப்பட்டது. ஆனால் சூடான் நாட்டு அதிகாரிகள் இந்த விமானத்தைத் தமது நாட்டு விமான நிலையத்தில் தரையிறக்க அனுமதிக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள்.

சூடான் நாடும் தங்கள்மீது அனுதாபம் வைத்திருக்கும். எனவே அங்கே விமானத்தைத் தரையிறக்கிவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்று இந்த விடுதலை அமைப்பினர் வைத்திருந்த திட்டம் குழம்பிப்போனது.

விமானம் சிறிது நேரம் எங்கே போகின்றது என்ற இலக்கு இல்லாமல் சூடான் இருந்த திசையில் பறந்து கொண்டிருந்தது. அதற்குள் கடத்தியவர்கள் தங்களுக்குள் கூடி ஆலோசித்தார்கள். ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள ஏதாவது ஒரு நாட்டில்தான் விமானத்தை இறக்குவது பாதுகாப்பானது என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். சூடான் தரையிறங்க அனுமதிக்க மறுத்தபின் வேறு எங்கே செல்வது.????

நேரமோ நள்ளிரவை தாண்டி சென்றுக் கொண்டு இருக்கின்றது. விமானம் எங்கு செல்வது என்ற இலக்கு இல்லாமல் பயணித்துக் கொண்டு இருக்கின்றது. விமானத்திற்குள் இருக்கும் பயணிகளுக்கும் தங்களின் முடிவு என்ன ஆகுமோ, எங்கு கொண்டு செல்கின்றார்களோ என்ற அச்ச உணர்வோடு மவுனிகளாய் உள்ளே அமைதி காத்தார்கள். மறுபுறத்தில் ப்ரான்ஸ், இஸ்ரேல் நாடுகள் தங்களின் ராணுவ, உளவு அமைப்புகளை முடுக்கி விட்டு கொண்டிருந்தார்கள்.

( மிகுதி பகுதி 3 இல்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லிடம் என்பதில்லான் ..

——————— கந்தவனம் கோணேஸ்வரன்.

இல்லிடம் என்பதில்லான் இகத்திலே கடையனாவான்
தொல்புகழ் பேசிப்பேசித் தொய்ந்துமே மாண்டுபோவான்.
ஏனைய மனிதர்முன்னால் ஏதிலி யாகிநிற்பான்
வானமே அளந்தாற்கூட மண்ணினுங் கீழாய்வீழ்வான்.

கலைகளை வளர்க்கமாட்டான் காட்சிகள் பெருக்கமாட்டான்
விலையிலாப் பண்டைப்புகழை வேற்றுளான் கொள்ளக்காண்பான்.
மனந்தனில் துணிவுகாணான் மறைவிலே வீரங்கொள்வான்
நனைந்திட்ட கோழியைப்போல் நாளுமே நைந்துபோவான்.

இந்நிலை தொடரலாமோ எஞ்சிறார் வருந்தலாமோ
தன்னிலை தனையுயர்த்தத் தமிழனும் முன்வரானோ.
வீணான பேச்சுவேண்டாம் வினையாற்றல் போதுமென்போம்
காணாத பெருமைமீட்கும் கருத்தது வளர்ந்தாற்போதும்.

உளத்திலே உறுதிவேண்டும் உன்னத மனமும்வேண்டும்
களத்திலே கருத்தாயாடிக் கனியதைப் பறிக்கவேண்டும்.
இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து இணைந்திட்ட கரங்களாலே
களைதனை விலக்கவேண்டும் கண்ணியம் மீட்கவேண்டும்.

எம்சிறார் வாழவேண்டும் எழுதனை உடையவேண்டும்
அம்புலி ஒளிர்ந்தாற்போல அவனியில் உயரவேண்டும்.


## மொழியின் அமைப்பு நிலைகள்

- ஒலி நிலை (Phone level)
- ஒலியன் நிலை (Phoneme level)
- உருபன் நிலை (Morpheme level)
- தொடரன் நிலை (Syntactical level)
- பொருளன் நிலை (Semantic level)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட எழுத்தாளர் - 01.



## திருமலை நவம் அவர்கள்.

'திருமலை நவம்' என அறியப்படுகின்ற வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சிதம்பரப்பிள்ளை நவரெத்தினம் அவர்கள் 1948.07.01 ஆம் ஆண்டு பிறந்தவர்.

**கல்வி:**

தனது ஆரம்பக் கல்வியினை ஏழாம் வகுப்புவரை வல்வெட்டி இந்துக்கலவன் பாடசாலையிலும் வகுப்பு எட்டு தொடக்கம் உயர்தரம் வரை திருக்கோணமலையிலுள்ள இந்துக் கல்லூரியிலும் படித்து 1972 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரத் தேர்விலே சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்த்திற்குத் தெரிவானார். திருக்கோணமலை மாவட்டத்தில் முதல்முதலாக பொருளியல் பாடத்தில் 'ஏ' தர சித்தியைப் பெற்றவர் திரு திருமலை நவம் அவர்களேயாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பொதுக் கலைமானிப்பட்டத் தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே 1990 ஆம் ஆண்டிலே முதுநிலைக் கலைமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

**கல்விப் பணி:**

1981 ஆம் ஆண்டு ஆலங்கேணி மகாவித்தியாலயத்திலே உதவி ஆசிரியராக முதல் நியமனத்தினைப் பெற்று ஆசிரியர் பணியினை 1992 ஆம் ஆண்டுவரை தொடர்ந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992ஆம ஆண்டு தொடங்கி பணியிலிருந்து ஓய்வுறும்வரை அதாவது 2008 ஆம் ஆண்டு வரை 16 ஆண்டுகள் பள்ளி முதல்வராக உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் பணியாற்றி அக்கல்லூரியை உயர்நிலைக்கு கொண்டுவந்த முழுப்பெருமையும் திரு. திருமலை நவம் அவர்களையே சாரும்.

**ஊடகத்துறை:**

பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போதே 1969 - 1972 காலப்பகுதியில் ஈழநாடு நாளேட்டின் நிருபராகவும் 1980-1988 காலப்பகுதியில் வீரகேசரி நிருபராகவும் 1988-1990 காலத்தில் தினபதி, சிந்தாமணி நிருபராகவும் செயலாற்றி 1990 தொடக்கம் இன்றுவரை வீரகேசரியின் நிருபராகவும் பணியாற்றுகின்றார்.

**எழுத்துத்துறை:**

பள்ளியிலே படிக்கும் காலத்தில் 1966 ஆம் ஆண்டு 'ஆனந்தி' எனும் கையெழுத்துப் பிரதியினை உதவி ஆசிரியராக அதன் ஆசிரியரான சாண்டிகோ சுப்பிரமணியத்துடன் எழுத்துத்துறையில் பிரவேசிக்கிறார். அதே ஆண்டிலே வீரகேசரியின் சகோதரிப் பத்திரையான 'ஜோதி'யிலே முதலாவது சிறுகதையினை எழுதியிருக்கிறார். தொடர்ந்து 'ராதா' எனும் வாரஏடு, தினகரன் நாளேடு ஆகியவற்றில் சிறகதைகள் எழுயிருக்கிறார்.

1970 ஆம் ஆண்டு 'முன்னோடிகள்' கலை இலக்கிய விமர்சனக் குழுவுடன் இணைந்து ஆக்கங்களுக்கான விமர்சனங்களை எழுதத் தொடங்கியவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் மூலமாக விமர்சனத்துறையில் தேர்ச்சி பெற்று எண்ணற்ற நூல்கள், கட்டுரைகளுக்கு விமர்சனங்களைச் செய்துள்ளார். 1974 ஆம் ஆண்டு ஈழத்திலே முதன்முதலாக 'ஈழத்து மேடை நாடகங்களை' ஆய்வு செய்து விமர்சனம் செய்த பெருமை திரு.திருமலை நவம் அவர்களையே சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உருவாக்கிய நூல்கள்:**

திரு.திருமலை நவம் அவர்கள் பேராசிரியர் பால.சுகுமார், சட்டவாளர் திரு.கா.சிவபாலன் ஆகியோருடன் இணைந்து 1994 இல் 'திருகோணமலை நாடக இலக்கியம்' என்ற நூலை வெளியிட்டார்.

2011 இலே 'திருகோணமலை கலை இலக்கியக் வரலாறு' என்ற நூலையும் 2017 ஆம் ஆண்டு 'இராவண தேசம்' என்ற தொல்லியல் ஆய்வு நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வீரகேசரியிலே அரசியல், சமூக அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றார். உயர்தர மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'முகைதீன் புராணம்', 'தமிழ் இலக்கண வழிகாட்டி', 'தமிழ் இலக்கிய வழிகாட்டி', 'திருக்குறள் ஆய்வு' போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

1912 இல்:- இலங்கையில் சாரண இயக்கம் திரு எப்.ஜீ.ஸ்ரீபன் என்பவரால் மாத்தளையிலுள்ள கிறித்தவ தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1914 இல்:- திரு எவ்.ஜீ.ஸ்ரீபன்ஸ் அவர்களால் காலித் துறைமுகத்திலுள்ள கிறித்தவ ஆலயத்திற்கு சாரண இயக்கம் கொண்டுவரப்பட்டது.

1916 இல்:- ஸ்ரீவ்லொக் விளையாட்டுத் திடலில் மேல்மாகாணத் திரள்அணிக் கூட்டம் நடைபெற்றது.

1917 இல: ஸ்ரீவ்லொக் ஓட்டத்திடலில் முதலாவது இலங்கை சாரண திரளணிக் கூட்டம் நடைபெற்றது.

1918 இல்: இலங்கையில் கடற்சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006.01.02 ஆம் நாள் திருக்கோணமலை கடற்கரையிலே படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நிகழ்வினை நடுவகப் பொருளாக வைத்து உருவாக்கிய 'தேசாந்தரம்' என்ற குறுநாவல் வீரகேசரியில் வாராந்தம் தொடர்ச்சியாக வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது.. தற்போது 1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்திலே நடைபெற்ற வன்செயல்களை கருப்பொருளாக வைத்து 'தொண்ணூறு' எனும் நாவலை எழுதி வருகின்றார். விரைவில் 'தொண்ணூறு' வாசகர்களின் பசிக்குத் தீனி போடும் என நம்பலாம்.

**கூட்டுறவுத்துறை:**

1980 ஆம் ஆண்டிலே திருக்கோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே கூட்டுறவாளனாக இணைந்து கொண்ட திரு.திருமலை நவம் அவர்கள் 2013 ஆம் ஆண்டில் பணிப்பா ளர்சபை உறுப்பினராகவும் அதே ஆண்டில் உபதலைவராகவும் பதவி வகித்திருக்கிறார். 2013 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அதன் தலைவராக செயற்படு கின்றார். அத்துடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 வரை திருக்கோணமலை மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும் பணியாற்றி யிருக்கிறார்.

**அரசியல்:**

1970 ஆண்டிலே சீன கம்யூனிஸ்ட் கட்சியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலும் ஒரே நேரத்தில் அங்கத்துவம் பெற்று இடதுசாரி, வலதுசாரி அரசியல் செயற்பாட்டில் ஒரே நேரத்தில் செயற்பட்டிருக்கிறார். தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தன் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கோலம்.

திரு.வி.நவரெத்தினராஜா,
ஓய்வுநிலை அதிபர், சேனையூர்

'ஓ.. அந்தா கரிச்சான் குருவி கத்துது.' இப்ப மூணு மணி இருக்கும். 'சாமக் கோழியும் ரெண்டொன்று அங்க இங்க கூவுது.' இப்ப மூணரை இருக்கும். 'ம்...ம்.. அந்தா குயிலும் கூவுது'. இப்ப நாலு மணி ஆச்சுது. 'சரி சரி...அந்தா பரவலா சேவலெல்லாம் கூவத் தொடங்கித்து'. இப்ப நாலரை மணி. 'இனி நித்திரை வராது. வெளியில போய்த்தான் என்ன செய்யிற...இருட்டாவும் இருக்கும்...குளிராவும் இருக்கும். பனிக்குளிரில வெளியில போய் சளி புடிச்சிட்டா எக்கணம் மாத்திறதும் சிக்கல். வயது போன காலத்தில சும்மா ஏன் நோய வில குடுத்து வாங்குவான். நல்லா விடியட்டும். கொஞ்ச நேரம் படுத்துக் கிடப்பம். இப்ப விடிவெள்ளி நல்லா மேல வந்திருக்கும். அந்தா.... காகமும் கரையத் தொடங்கிட்டுது'. அஞ்சு மணி ஆச்சு. விடியப் போகுது. ..ம்.... இப்ப கொஞ்சம் கொஞ்சமா கிழக்கு வெளுத்து வரும். பக்கத்தில என்ர பேத்தி விஷ்ணுகா நல்ல நித்திர. பாவம் கொஞ்ச நேரம் படுக்கட்டும். 'விடியுது, விடியுது' எண்டு பறவைகள் எல்லாம் செய்திகள பரிமாறத் தொடங்கிட்டுதுகள். அந்தக் கௌதாரிக் குருவியும் கத்தத் தொடங்கிட்டுது. அஞ்சரை ஆச்சுடாப்பா...எழும்புவம்....

'என்ன தாத்தா ஆரோட கதைச்சுக் கொண்டு கிடக்கிறீங்க' 'ஓண்டி புள்ள... நீயும் முழிச்சிட்டா போல... 'நான் நேரத்தோடயே முழிச்சிட்டன். வெளியில குருவிகள் கத்துற சத்தத்த கேட்டுத்துக் கிடந்தனான். நீயும் கேளம்மா... என்ன குருவி கத்துது எண்டு உனக்குத் தெரியுதா பாப்பம்'...'அந்தா கத்துறது என்ன குருவி எண்டு தெரியுமா விஷ்ணுகா? அதுதான் கௌதாரிப் பறவ'. இப்ப அஞ்சரை மணி. அஞ்சரைக்குத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கத்தும். கௌதாரிப் பறவ…என்று தாத்தா சிரிக்கத் தொடங்கினார்.

'என்ன தாத்தா சிரிங்கிறீங்க..?' 'சின்ன வயசில உன்ர அம்மாவுக்கு காலயில கத்துற பறவ எண்டு இத எழுதிக் குடுத்தனான். அத உன்ர அம்மா கோதாரிப் பறவ எண்டு வாசிச்சா. அத நினைச்சித்தான் சிரிச்சனான்' என்றதும் விஷ்ணுகாவும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். விஷ்ணுகா சிரிக்கும் சத்தம் அம்மாவுக்கும் அம்மம்மாவுக்கும் கேட்டது. விபரம் சொல்லியவள் 'கோதாரிப் பறவ..கோதாரிப் பறவ' என்று சத்தமாய்ச் சொல்லிவிட்டு விஷ்ணுகா மீண்டும் சிரிக்கத் தொடங்கினாள். பழைய நினைவுகள் நினைவுக்கு வர அம்மாவும் அம்மம்மாவும் சேர்ந்து சிரித்தனர். விஷ்ணுகா தாத்தாவின் மார்பில் தலையை வைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் சிரித்தாள்.

'..சரியம்மா…அஞ்சரை ஆச்சுது. நல்லா விடிஞ்சிருக்கும். எழும்புங்க. வெளியில போவம். ஆறு மணி எண்டா காகம் கத்தத்தொடங்கிடும். அந்தா கேட்டீங்களா… காகம் கரையத் தொடங்கித்து. அதோட வேற வேற சத்தமும் கேக்குது. நல்லா உத்துக் கேளம்மா… என்னென்ன சத்தம் கேக்குதெண்டு சொல்லு பாப்பம்…'

காகம் கத்துது தாத்தா…. அந்தா அது ..அது..செண்பகம்…. குக்குறுப்பான்…குக்குறுப்பான் தாத்தா…

குக் கூ…கூ கூ…குயிலும் கத்துது தாத்தா… அந்தா…அந்தா….அது என்ன தாத்தா… புதுக் குருவி?

'ஓ அதுவா…அதுதான் ஆட்காட்டி….ஆக்காண்டி எண்டு சொல்லுவாங்க'…'ஏன் தாத்தா இத ஆட்காட்டி எண்டுறாங்க…?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் விஷ்ணுகா வயலுக்க, தோட்டத்துக்குள்ள தனிய மாலுக்குள்ள காவலுக்கு இருப்பம். திடீரெண்டு இந்தக்குருவி பெருங் குரலெடுத்துக் கத்தும். வேளியில வந்து பாத்தா ஆராவது வந்துகொண்டு இருப்பாங்க. அதுதான் வாற ஆக்கள காட்டிக் குடுக்கிறதால இந்தப் பேர்வந்ததாம். ஆட்காட்டி எண்டதுதான் பேச்சு வழக்கி ஆட்காண்டி எண்டும் அக்காண்டி எண்டும் சொல்லுவாங்க.

அது மட்டுமில்ல. வயற்பக்கம் வேலிக்கு வெளியில ஆடு, மாடு, பண்டி, யானை ஏதும் மிருகங்கள் திருட்டுத்தனமா வந்தாலும் இது காட்டிக் குடுத்துடும்.நாங்க வெளிய வந்து வெளிச்சம் காட்டி சத்தம் போடுவம். வந்த மிருகங்கள் திரும்பிப் போயிரும். கள்ளன் திருட்டுத்தனமா வந்தாலும் இது காட்டிக்குடுத்திடும். ஆக்காண்டி விவசாயிகளுக்கு நண்பன்தானே விஷ்ணுகா? இந்தப் பறவயப் பத்தி இன்னும் சொல்லப் போனா இதுகள் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சி பொரிச்ச காலங்களில பெண் பறவ அடகாக்க ஆண் பறவ மேலநிண்டு பாத்துக் கொண்டிருக்குமாம். ஆராவது வந்தா ஆண் பறவ பெருங்குர லெடுத்துக் கத்தத் தொடங்கிடுமாம். அந்த நேரத்தில பெண் பறவ தான் இருந்த இடத்த விட்டு எழும்பாதாம். மெதுமெதுவா தவண்டு தவண்டு கொஞ்சத்தூரம் போய்தான் எழும்பி தானும் சேந்து கத்திப் பறக்குமாம். 'ஐயையோ ஏன் தாத்தா பெண் பறவ தவண்டு தவண்டு கொஞ்சத் தூரம் போய் எழும்பிப் பறக்கிறது?'..பின்ன.. அது ஒரு பாதுகாப்புக்குத்தான். தன்ர முட்டையோ குஞ்சையோ எடுத்து உண்ண வந்த எதிரிகளிட்ட இருந்து தப்பிக்க வேணாமா?..இருந்த இடத்தில இருந்து திடிரெண்டு எழும்பினா என்ன நடக்கும்..? எழும்பின இடத்துக்கு எதிரி வந்து சுலபமா வந்து எதிரி முட்டயோ குஞ்சையோ எடுத்தித்துப் போயிருவான் இல்ல.

'அட ஓம்என. இது நல்ல புத்திசாலிப் பறவ தாத்தா.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுகா இன்னொரு கத தெரியுமா? இந்தப் பறவ கத்திறதப்பத்தி ஒரு வெள்ளக்காரன் ஒரு புத்தகத்தில எழுதியிருக்கிறான். அது எப்புடி கத்துமெண்டாவாம் 'டிட் யூ டூ இற்' ...'டிட் யூ டூ இற்'...'டிட் யூ டூ இற்' ..Did you do it. Did you do it. Did you do it. இப்பிடிக் கத்துமாம்.

'ஓம் தாத்தா அந்த வெள்ளக் காரன் எழுதி இருக்கிறமாரித்தான் தாத்தா இப்ப எனக்குக் கேக்குது..'

'நம்மட ஆக்கள் என்ன சொல்றாங்க எண்டு தெரியுமா?.. எங்கட வீட்டுக்குப் பக்கத்தில பத்தினியர் மாமா இருந்தவர். அவர்தான் சொல்லித் தந்தவர். 'கொட்டப்பாக்கு...கொட்டப்பாக்கு..' எண்டு ஆக்காண்டி கத்துது' எண்டு சொல்லுவார்.

'நல்ல ஆள் தாத்தா நீங்க . எல்லாத்தயும் அறிஞ்சி வச்சிருக் கீங்களே தாத்தா'

இது மட்டுமில்லம்மா, நம்மட சங்க காலத்திலயும் இந்தப்பற வயப் பத்தி சொல்லி இருக்காங்க. அப்ப இதுர பேர் ஆக்காண்டி இல்ல.'கணந்துள் பறவை'. நற்றிணையிலயும் குறுந்தொகை யிலயும் இந்தப் பறவயப் பத்திச் சொல்லியிருக்காம்.

நம்மட ஊரில பாடுற நாட்டார் பாட்டிலயும் ஆக்காண்டியப்பற்றி பாட்டு இருக்குத் தெரியுமா விஷ்ணுகா?

'என்ன தாத்தா பாட்டா. ஆக்காண்டியப் பத்தியா... பாடுங்க தாத்தா.. எனக்காண்டி ஒருதரம் பாடுங்களன் தாத்தா. என்ர அச்சா தாத்தா அல்லோ.' .. தாத்தா பாடத் தொடங்கினார்

ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே முட்டை இட்டாய்
கல்லைத் துளைத்து கடலோரம் முட்டையிட்டேன்.
இட்டதுவோ நாலு முட்டை பொரிச்சதுவோ மூணு குஞ்சு
மூத்த குஞ்சுக் கிரைதேடி மூணுமலை சுத்தி வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய குஞ்சுக் கிரைதேடி ஏழுமலை சுத்தி வந்தேன்

பார்த்திருந்த குஞ்சுக்கு பவளமலை சுத்தி வந்தேன்

புல்லத்தான் புலவிக்கு காய்தின்னப் போகையில

மாயக்குறத்தி மகன் வழிமறித்துக் கண்ணி வைத்தான்

காலிரண்டும் கண்ணியிலே சிறகிரண்டும் மாரடிக்க

நான் அழுத கண்ணீரும் என்குஞ்சழுத கண்ணீரும்

வாய்க்கால் வழியோடி வழிப்போக்கர் கால்கழுவி


குண்டு நிறைந்து குதிரை குளிப்பாட்டி

இஞ்சிக்குப் பாய்ஞ்சி இலாமிச்சை வேருண்டி

மஞ்சளுக்குப் பாஞ்சி மறித்ததாம் கண்ணீரே.


# New City Jewellers

Dealer in Gurented 22kt Jewelery



No.176, N.C.Road, Trincomalee
Phone 026 2221445, Fax : 026 2227332
FB : newcityjewelers
e-mail : info@newcityjewelers.com
web : newcityjewelers.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உருபா எங்கே?

மூன்று நண்பர்கள் காலை உணவு உண்பதற்காக உணவக மொன்றிற்குச் சென்றார்கள். காலை உணவாக உலகில் சிறந்த உணவான இட்லி சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டு முடிந்தவுடன் சாப்பாட்டிற்கான பற்றுச்சீட்டினை உதவியாளர் ஒருவர் கொண்டு வந்து கொடுத்தார். அதில் மூன்று பேருக்குமான மொத்தத் தொகை உருபா 75.00 என இருந்தது.

ஒவ்வொருவரும் உருபா.25.00 இனை தமது பண உமலில் இருந்து எடுத்து மொத்தமாக உருபா 75.00 இனைக் கொடுத்தார்கள்.

கடை உரிமையாளரோ மூவரும் நாளும் தமது உணவகத்தில் உணவு உண்பவர்கள் என்பதனால் உருபா.5.00 இனை மீள உதவியாளரிடம் கொடுத்து அவர்களிடம் கொடுக்குமாறு கூறினார்..

உதவியாளர் தனது பணிக்காக இரண்டு உருபாக்களை தான் எடுத்துக் கொண்டு மிகுதியை ஒவ்வொருவருக்கும் ஓர் உருபா வீதம் கொடுத்தார்.

ஒவ்வொருவரும் தமது உணவிற்காக கொடுத்தது 25.00 – 1.00 = 24.00 உருபாக்கள்.

மூவரும் மொத்தமாகச் செலுத்தியது = 24.00 X 3 =72.00 உருபாக்கள்

உதவியாளர் தனக்கொன எடுத்துக்கொண்டது = 2.00 உருபாக்கள்.

மொத்தம் = 74.00 உருபாக்கள்.

ஆனால் ஆரம்பத்தில் மூவரும் உதவியாளரிடம் கொடுத்தது உருபா.75.00 ஆகும்..

அப்படியெனில் ஓர் உருபா எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/வாகரைப் பிரதேச மக்களது வாழ்வியல் - நேரடி ஆய்வறிக்கைச் சுருக்கம்.

(முனைவர். ஞா.தில்லைநாதன்.
தலைவர், சமூக விஞ்ஞான பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில்(வாகரை) 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 8352 குடும்பங்களைச் சேர்ந்த 26604 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 8000 குடும்பம் சமுர்த்தி பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இங்கு இயற்கையாகவே பௌதிக வளங்களைக் கொண்டுள்ள போதிலும் யுத்தம், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்டமையினால் மேம்பாடு என்பது இங்குள்ள மக்களுடைய வாழ்வியலில் ஏற்படவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

தொழிலின்மை, வறுமை, பாடசாலை இடைவிலகல், பாடசாலை செல்லாமை, மது, போதைப்பொருள் பாவனை(சில ஊர்களில் ஆண், பெண் இருபாலாரும்), குடும்பப் பிரிவு, இளவயதுத் திருமணம், பலபெண் திருமணம், பிள்ளைகளுக்கு தாய் தந்தையரின் பாதுகாப்பின்மை, இள வயதினரிடையே பிறழ்வான நடத்தைக் கோலங்கள், எழுத்தறிவின்மை போன்ற சமூகச் சிக்கல்கள் அதிகரித்துச் செல்வதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இங்குள்ள குஞ்சுக்குளம், கதிரவெளி, புதூர் போன்ற ஊர்களில் தொண்மைக்குடிகள்(பழங்குடிகள்) தமது தொழில்களை, வாழ்வியல் விடயங்களை இழந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக கதிரவெளி, புதூர் பகுதியில் உள்ள 47 குடும்பங்களில் உள்ளவர்களின் தொழிலின்மை, வறுமை, கரணீயமாக பிள்ளைகளையும் காடுகளுக்குக் கூட்டிச் சென்று பழங்களைச் சேகரித்து திருக்கோணமலை-மட்டக்களப்பு முதன்மை தெருவில் விற்பனை செய்கின்றனர். அத்துடன் தெருவின் இரு மருங்கிலும் உள்ள கருங்கற்களை உடைத்து விற்பனை செய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் இங்குள்ள 59 கல்வி கற்கும் பிள்ளைகளின் கல்வி மழுங்கடிக்கப்பட்டு சிறுவர்களுக்குரிய உள, உடல் நிலை பாதிக்கப்பட்டு பாடசாலைக்குச் செல்ல மறுப்பதனையும், இடைவிலகல், மற்றும் கல்வி கற்கின்ற மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலையும் அதிகரித்து செல்வதை அவதானிக்கக் முடிந்தது.

அத்தோடு இளவயதுத் திருமணம், சிறுவர் மீதான பிறழ்வு நடவடிக்கைகள், மது மற்றும் போதைப்பொருள் பாவனை, குடும்பப் பிரிவு போன்றவைகள் ஏற்படுகின்றன.

இவர்களிடம் உள்ள திறமைகளை உரிய வழிவகைகள் மூலம் நிறுவன ரீதியான அணுகுமுறையில் பிரயோகப்படுத்திய போது நல்ல மாற்றங்களை அவதானிகக முடிந்தது.

எனவே அரசு, அரசசாரா நிறுவனங்கள், தனியார்கள், இவர்களது பிள்ளைகளின் கல்வியையும் எதிர்கால வாழ்வியல் பண்பாட்டு சூழலையும் வளம்பெற தொழில் நிலைகளை (இங்குள்ள வளத்தை வைத்து)யும் மனநிலைகளையும் மாற்றீடு செய்வார் களானால் இங்குள்ள சமூகச் சிக்கல்களை இல்லாமல் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் மீன்கள் என்ன நீர் குடிக்கும்???

ஜனாப். இஹ்சான் ஜே.எம்.ஐ.மொஹமட், மூதூர்.

மீன்கள் நீர் அருந்துவதில்லை என்று சொன்னால் நம்பவா போறீங்க?? அதான் உண்மையும் கூட.. மீன்களை பொறுத்த மட்டில் நன்னீர் மீன்கள் உவர்நீர் மீன்கள் என்ற இருவகையில் வேறுபடுத்த முடியும். அந்தவகையில், தான் வாழும் சூழலுக்கு ஏற்றல் போல் தனக்கு தேவையான நீர் மற்றும் முக்கிய ஊட்டங்களான அயடின், சோடியம் போன்றவற்றை உடலிற்குள் உள்ளீர்ப்பு செய்து கொள்கிறது.

அந்தவகையில் மீன்கள் நீருக்குள் வாழ்ந்தபோதும் அவை நீர் அருந்துவது மிக அரிதாகவே உள்ளது. இதற்கான காரணம் அவற்றுக்கு நீர் அருந்துவதற்கான தேவையை அவற்றின் உடல் தோல் பூர்த்தி செய்கிறது.

ஒஸ்மோசிஸ் (**Osmosis**):

ஒஸ்மோசிஸ் என்பது நீர்செறிவு கூடிய இடத்தில் இருந்து நீர் செறிவு குறைவான பகுதிக்கு நீர் மூலக்கூறுகள் சேர்ந்து புகவிடும் சவ்வினூடாக ஊடறுத்து செல்வதை குறிக்கும். இந்நிகழ்வு பொதுவாக உயிருள்ள கலங்களுக்கு பொதுவான நிகழ்வாகும்.

இதற்கு எதிர்மாறாக தலைகீழ் ஒஸ்மோசின் (Reverse Osmosis) காணப்படுகின்றது. மீன்களின் உடலமைப்பில் காணப்படும் செதில்கள் மற்றும் மெழுகு தன்மை கொண்ட மேற்சளியம் என்பன நீர் நேரடியாக உடலில் தாக்கம் செலுத்துவதையும் ஊடறுத்து செல்வதையும் மேலதிகமாக பாதுகாக்கின்றது. அநேகமான நேரங்களில் மீன்கள் தாங்கள் உண்ணும் உணவில் இருந்தே அதற்கான நீர் தேவையை பூர்த்தி செய்துகொள்கின்றன என்பதே வியப்பான உண்மை யாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைக் கொல்லும் உயிரினங்கள்.

1. வீட்டு நாய்கள்

ஆண்டுதோறும் வீட்டு நாய்கள் தாக்குவதால் பலர் உயிரிழக்கின்றனர். நாய்கள் மீது மனிதர்கள் காட்டும் அடக்குமுறையே அவைகளின் இந்த ஆக்ரோஷத்திற்கு காரணமாக பார்க்கப்படுகிறது.

2. காட்டெருமைகள்

காட்டெருமைகள் தாக்குவதால் ஆண்டுதோறும் சுமார் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர்.

3. யானைகள்

நிலத்தில் வாழும் மிகப்பெரிய உயிரினமாக கருதப்படும் யானைகள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 500 மனிதர்களை கொல்வதாக கூறப்படுகிறது

4. முதலைகள்

நீர், நிலம் இரண்டிலும் வாழும் முதலைகள் மறைந்திருந்து நீரில் தாக்கும் சக்தி படைத்தவை. இவை ஆண்டுக்கு 1000-2500 மனிதர்களை கொல்கின்றன.

5. நீர் யானைகள்

நீர் யானைகள் பார்க்க சாதுவாக இருந்தாலும், மிகவும் ஆக்ரோஷமாக தாக்கும் இயல்புடையவை. நீர் யானைகளால் ஆண்டுக்கு 2900 பேர் உயிரிழக்கின்றனர்.

6. தேள்

விசத்தன்மை கொண்ட தேள்கள் கொட்டுவதால், ஆண்டுக்கு 1000-5000 பேர் வரை உயிரிழக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாம்புகள்

மனிதர்களை அதிகம் பயமுறுத்தும் மிருகங்களில் ஒன்று பாம்பு என்றால் மிகையாகாது. உலகில் பல வகையான பாம்புகள் தாக்கி சுமார் 50,000 மனிதர்கள் உயிரிழக்கின்றனர்.

8. ஈக்கள்

'ட்சிட்சி' என்ற வகையான ஈக்கள் பரப்பும் 'ஸ்லீப்பின்ட்' என்ற நோயால் ஆண்டு ஒன்றுக்கு 5,00,000 பாதிக்கின்றனர். அதில் 80% பேர் உயிரிழக்கின்றனர்.

9. நுளம்புகள்

நுளம்புகளால் மலேரியா, டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவுகின்றன. இதனால், ஆண்டுக்கு சுமார் 6,60,000-10,00,000 பேர் வரை உயிரிழக்கின்றனர்.

SHERO

SHERO TRADING (PRIVATE) LTD

*Household electrical items*

No : 109B, Thirugnanasampanthar Street,
Trincomalee.
E-mail : sheropvt@gmail.com
Tel : 0262224444
Mob : 0773174649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியாவின் கல்விக் கண்ணைத் திறந்து விட்டவர் அமரர். காசிநாதர்

-ஏ.ஸீ.எம்.முஸ்இல்-



கிண்ணியாவின் கல்விக் கண்ணைத் திறந்து விட்டவர் அமரர் த. காசிநாதர் அவர்களாவர். இவர் அமரர்களான தம்பர் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஆறாவது புதல்வராக 1905.03.04 ஆம் நாள் சின்னக் கிண்ணியாவின் துறையடியை அண்டிய பகுதியில் பிறந்தார்.

கிண்ணியா துறையடியில் இயங்கிய திண்ணைப் பள்ளியிலும் பின்னர் மட்டக்களப்பு அரசடி வித்தியாலயத்திலும் கல்வி கற்ற இவர் 1930 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றார். அந்த வகையில் கிண்ணியாவின் முதலாவது ஆசிரியர் இவராவார்.

அளவெட்டி, நிலாவெளி, திருக்கோணமலை, கிண்ணியா, பள்ளிக்குடியிருப்பு, ஆலையடிவேம்பு, தம்பலகமம், குச்சவெளி போன்ற பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராக மற்றும் அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் பின்னர் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். 1945 முதல் 1955 வரை 10 ஆண்டுகள் தற்போதைய கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி உள்ள இடத்தில் இயங்கிய பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார்.

முன்னர் கலவன் பாடசாலையாக இருந்த இப்பாடசாலை இவரது காலத்தில்தான் ஆண்கள் வித்தியாலயமாகவும், பெண்கள் வித்தியாலயமாகவும் பிரிக்கப்பட்டது. இரு பாடசாலைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காணியில் வேலியால் பிரிக்கப்பட்டு வெவ்வேறாக இயங்கின. பின்னர் ஆண்கள் வித்தியாலயம் தற்போது இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

பாடசாலை பிரிக்கப்பட்ட பின் இவர் ஆண்கள் வித்தியாலய அதிபராகவும், இவரது துணைவி செல்லப்பா இரட்ணபூபதி பெண்கள் வித்தியாலய அதிபராகவும் கடமையாற்றினர். இவர்களது சேவைக்காலம் கிண்ணியாவின் கல்வி வரலாற்றில் பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது.

கிண்ணியாவில் கல்வி மட்டம் குறைந்திருந்த அக்காலத்தில் இவர் மிகவும் அர்ப்பணிப்போடு பணியாற்றினார். இங்குள்ள மாணவர்களுக்கு எப்படியாவது கல்வி கற்கும் ஆர்வத்தை தூண்டி கற்க வைக்க வேண்டும் என்பதில் மிகவும் தியாகத்தோடு பணியாற்றினார். கற்கக் கூடிய வயதுள்ள மாணவர்கள் உள்ள வீடுகளுக்குத் தேடிச் சென்று அவர்களை அழைத்து வந்து கற்பித்தார்.

வறுமை காரணமாக பலர் அக்காலத்தில் கல்வியை இடையில் கைவிட்டனர். இதனால் மிகவும் மனமுடைந்த இவர் தனது சொந்தப் பணத்தில் உணவு வழங்கி மாணவர்ளைக் கற்க வைத்தார். இவரது தோளில் எப்போதும் ஒரு பை இருக்கும். அதனுள் "வாட்டு ரொட்டி, ரஸ்க், பல்லிமிட்டாய் " போன்ற தின்பண்டங்கள் இருக்கும். மாணவர் நிலையறிந்து அவற்றை அவர்களுக்கு அவர் கொடுப்பார்.

இதனால் வறுமை காரணமாக பாடசாலையைக் கைவிட்ட சில மாணவர்கள் மீண்டும் பாடசாலையில் இணைந்து கற்கத் தொடங்கினர்.

கிண்ணியாவின் ஆரம்பகால முஸ்லிம் ஆசிரியர்களான மர்ஹூம் ரீ.ஏ.எம்.இஸ்ஹாக், மர்ஹூம் எம்.ஐ.எம்.இப்ராஹீம் (காசீம்பாவா மாஸ்டர்), கவிஞர் மர்ஹூம் அண்ணல் (எம்.எஸ்.எம்.சாலிஹ்) உட்பட இன்னும் சிலர் இவரால் உருவாக்கப் பட்டவர்களேயாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் கிண்ணியாவின் கல்விக் கண்ணை திறந்து விட்ட பெருந்தகை இவர் என்று துணிந்து கூறலாம்.

கிண்ணியாவிலிருந்து புலமைப் பரிசில் பெற்று மேல் படிப்புக்காக வெளியூர் செல்லும் மாணவர்களை இவர் தனது சொந்தச் செலவில் அப்பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்ற சம்பவங்கள் பல உள்ளன.

கிண்ணியா மக்களால் "முருகுப்பிள்ளை வாத்தியார்" என செல்லமாக அழைக்கப்பட்ட இவர் அக்கால மக்கள் அனைவரினதும் மனங்களில் நீங்கா இடம் பிடித்திருந்தார்.

இவரது சேவைக் காலத்திலிருந்தே கிண்ணியாவின் கல்வித் துறை மறுமலர்ச்சி பெற்றுள்ளதை கிண்ணியாவின் கல்வி வரலாற்றை ஆய்வு செய்கின்றவர்களால் கண்டு கொள்ள முடியும்.

பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் பல்வேறு சமூகப் பணிகளில் தொடர்ந்து இவர் ஈடுட்டுள்ளார். திருக்கோணமலை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் பொருளாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கிண்ணியா ஊற்றடிப் பிள்ளையார் ஆலயத்தின் தலைவராகவும், திருக்கோணமலை வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் மற்றும் கோணேசர் கோயில் போன்றவற்றின் பரிபாலன சபை உறுப்பினராகவும் பணியாற்றி யுள்ளார்.

எனது தந்தையாரின் புத்தகக் கடைக்கு (றஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்) முன்னால் இவரது உறவுக்காரரான செல்வராசா என்பவரின் வீடு இருந்தது. அங்கு அடிக்கடி வரும் இவர் எனது தந்தையாரை சந்திக்கவும் வருவார். வரும் போது "ஹாஜியார் ஸலாம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைவார். அப்போது சிறுவனாக இருந்த எனது மனக் கண்ணில் அவரது தோற்றம் இன்றும் நிழலாடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை – தம்பலகமம் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் மனோஜின் தாய்), சட்டத்தரணி சிவபாலன் ஆகிய இருவரும் இவரது பிள்ளைகளாவர்.

காசிநாதர் ஐயா கடந்த 1989 டிசம்பரில் இவ்வுலகை விட்டும் பிரிந்தார். இவர் மறைந்து பல ஆண்டுகள் சென்றாலும் கிண்ணியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனாலும் மறக்கப்பட முடியாத ஒருவராக இவர் இருக்கின்றார் என்பதில் ஐயமில்லை.

தென் திராவிட மொழிக்குடும்பம்

- தமிழ்
- மலையாளம்
- கன்னடம்
- தொடா
- கோத்தா
- துளு
- குடகு
- கொரகா

மத்திய திராவிட மொழிக்குடும்பம்

- தெலுங்கு
- கோண்டி
- கொண்டா
- பெங்கோ
- மண்டா
- கூயி
- கோலாமி
- கட்பா
- நய்க்கி
- பர்ஜி
- கோயா

வட திராவிட மொழிக்குடும்பம்

- ப்ராகூய்
- மால்தோ
- குருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் அறிவோம்

சட்டவரைஞர் சபருள்ளா, கிண்ணியா

## சாட்சிகளையும் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாத்தல்

**சட்ட ஏற்பாடுகள்**

நிலைமை இப்போதெல்லாம் முன்னம் மாதரியில்லை என்பதனை ஆரம்பத்திலேயே சொல்லிக் கொண்டு........எந்த நிலைமையை நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள் வாத்தியாரே என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. அதாவது குற்றங்களைப் பொறுத்த வரை இப்போது குற்றமொன்றினால் பாதிக்கப்பட்டு நீதிமன்றத் துக்கு வந்திருக்கின்ற பாதிக்கப்பட்டவர் மற்றும் அந்த வழக்கி லுள்ள இதர சாட்சிகளை பாதுகாக்கின்ற சட்ட ஏற்பாடுகள் இப்போது சற்று வலிமையாக இருக்கின்றன.

2015ம் ஆண்டின் 04ம் எண், குற்றங்களுக்கு ஆளான பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதும் அவர்க ளுக்கு உதவி வழங்குவதுமான சட்டம் (Assistance to and Prtection of Victims of Crime and Witnesses Act No: 4 of 2015) தற்போது மிகக் கடுமையாக இருக்கின்றது. 2015ம் ஆண்டுக்கு முன்னர் இந்த மாதிரியான சட்டம் ஏதும் நமது நாட்டிலிருக் கவில்லை. குற்றங்களில் பாதிக்கப்பட்டு நிற்கின்றவர்களையும் அதே போல குற்றவியல் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சாட்சியமளிக்க வருகின்ற சாட்சிகளை குற்றமிழைத்த வர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் அல்லது அவர்கள் சார்பாக வேறு யாரேனும் நபர்கள் யாருமே அச்சுறுத்தி அவர்களுக்கு இடையூறு விளைவித்து விடக்கூடாது என்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்டதே இந்த சட்டம்.

மிகக் கடுமையான சட்டம். இந்தசட்டத்தின் பிரதான நோக்கம் குற்றங்களின் போது அந்த குற்றங்கள் காரணமாக பாதிக்கப் படுகின்றவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் அவர் களுக்குள்ள உரித்துகளையும் பாதுகாத்து அவற்றை மேம் படுத்துவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை பாதுகாப்பதும், பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகளுக்கு உத்தரவாதமளிப்பதுமாகும், யாருக்கெதிராக குற்றமிழைக்கப் பட்டதோ அவர்கள் தமக்கெதிராக குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக காணப்படுகின்றவிடத்து அவர்களிடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொடுப்பது, குற்றங்களின் போது பாதிக்கப்பட்டர்களினதும் சாட்சிகளினதும் உரிமை களைப் பாதுகாப்பது, அவற்றை மேம்படுத்தவது அரசாங்கம், பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் நீதித்துறைக்கு உள்ள பொறுப்புகளையும் கடமைகளையும் சுட்டிக்காட்டுவது குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கெதிராகவும் மற்றும் சாட்சிகளுக்கெதிராகவும் குற்றங்கள் இழைக்கப்படுகின்ற போது அந்தக் குற்றங்கள் புரிகின்றவர்களைத் தண்டிப்பதும், குற்றங் களில் பாதிக்கப்பட்டவர்களதும் சாட்சிகளதும் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவதும் அவர்கள்மீது அதிகூடிய அக்கறை செலுத்துதலும் என்று பல நோக்கங்களின் பின்னணியில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் பிரிவு-08இன் படி யாரேனும் ஒருநபர் குற்றங்க ளின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை அச்சுறுத் துவது அவர்களது சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பது அவர்களது நற்பெயருக்கு களங்கம் விளைப்பது வேண்டு மென்றே அவர்களுக்கு காயம்விளைவிப்பது அதேபோல அவர்கள் வாழ்கின்ற இடத்திலிருந்து அவர்களை வெளியெற்றத் தூண்டுவது அதற்காக ஏதேனும் வேலைகளைப் புரிவது போன்றன இந்த சட்டத்தின் கீழ் மாபெரும் குற்றங்களாகும்.

அவ்வாறு இந்தச்சட்டத்தின் கீழ் குற்றங்கள் புரிந்ததாக சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தி வழக்கிடப்படுகின்றவர்களுக்கு இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் மட்டுமே பிணை வழங்க முடியும் அத்தோடு குறித்த நபர்களுக்கெதிரான வழக்கானது மேல் நீதிமன்றில் மட்டுமே இடம்பெறும். பயங்கரமான சட்டமிது. எனவேதான் குற்றவியல் வழக்கொன்றில் உள்ள பாதிக்கப்பட்ட வரையோ அல்லது சாட்சிகளையோ நெருங்காமலிருப்பதும் அவர்களோடு தொடர்பே இல்லாமலிருப்பதுவும் உத்தமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகில் வியத்தகு தகவல்

ஜனா.:.ப். ஏ.எச்.எம்.சிறாஜ்,
நொக்ஸ் தெரு, மூதூர்-06.

கிழக்காபிரிக்க நாடான எதியோப்பியா நான்கு பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இது வடக்கில் எரித்திரியா வையும் கிழக்கில் சோமாலியாவையும் தெற்கில் கென்யாவை யும் மேற்கில் சூடானையும் எல்லைகளாகக் கொண்டது. பதினொரு இலட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட எதியோப்பியாவின் தலைநகர் அபாபா ஆகும்.

ஒரு காலத்தில் வறுமைக்கு எடுத்துக்காட்டிற்காக சோமாலியா, தன்சானியாவுடன் கூறப்பட்ட நாடாக விளங்கிய எதியோப்பியா இன்று அதிவேகமாக வளர்ந்துவரும் பொருண்மியம் கரணியமாக "ஆபிரிக்காவின் சீனா" என்ற புனைப் பெயர் கொண்டு அழைக்கப் படுகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மேலதிகமாக மனித மேம்பாடு சுட்டிகளான (Human Development Index) கல்வி, உடல்நலம் போன்றவற்றிலும் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.
'உங்கள் நாட்டில் விமான நிலையம் இருக்கா?' என ஒரு காலத்தில் கிண்டலுக்காக கேட்கப்பட்ட நாடான எதியோப்பியா வில் இன்று 'எதியோப்பியன் ஏர்லைன்ஸ்' ஆபிரிக்காவின் முதல்தர விமான சேவையாக மிளிர்கின்றது. அதுமட்டுமல்லாது உலக விமான சேவை தரப்படுத்தலில் பல ஐரோப்பிய நாடுகளைப் பின்தள்ளி முதல் இருபத்தைந்து விமான சேவை களுள் ஒன்றாக 2018 ஆம் ஆண்டில் இடம்பிடித்திருக்கிறது. இந்தத் தரப்படுத்தலில் எமது தாய்நாடான இலங்கையின் 'ஸ்ரீ லங்கன் ஏயர்லைன்ஸ்'இற்கு எண்பதாவது இடமாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பணிகள்.

திரு.கனகதயாளன்
முதல்வர்
உப்பூறல் சிவசக்தி வித்தியாலயம்.

நல்லது செய்திடவேண்டும் நாட்டிற்குழைத்திட வேண்டும்
வல்லவராய் வாழ்ந்து இந்த வையகம் போற்றிட வேண்டும்
பொய்மைகள் ஒழியவேண்டும் புகழோங்க வாழ்ந்திட வேண்டும்
மெய்மையால் உலகையுயர்த்தி மேன்மைகளடைந்திட வேண்டும்

பெரியாரைப்பேணிட வேண்டும் பெற்றோரை மதித்திட வேண்டும்
ஆசானை அணுகிட வேண்டும் அறிவுரை கேட்டிட வேண்டும்
கல்வி கற்றிட வேண்டும் நல்லகாவியம் படைத்திட வேண்டும்
நல்லவை செய்திட வேண்டும் நலம்பெற வாழ்ந்திட வேண்டும்

பாலர்நாம் கூடிநின்று பாடிப்பாடி ஆடுவோம்
தோழர் ஒன்றாய் கூடுவோம் சுறுசுறுப்பாய் ஓடுவோம்
தேவை நமக்கு உடல்நலம் நாளும் அதனைப் பேணுவோம்
நேரம்ஒன்றைக் குறிக்கணும் நித்தம் அதனை முடிக்கணும்

காலைநேரம் எழுந்ததும் நம்பிககை மனதில் கொள்ளணும்
மாலை முழுதும் விளையாடணும் மகிழ்ச்சியோடு வாழனும்
நம்தாய்தந்தை தெய்வமாம் நம்ஆசானும் தெய்வமாம்
எம்மைக்காக்கும் தெய்வத்தை என்றும் தொழுது போற்றுவோம்.
நாளை உலக நாயகர் நாங்கள் என்று உரைக்கணும்
வேளை தோறும் பண்புகள் வாழ்ந்துரைத்துக் காக்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அறிவோம் பாகம் - 02

— தமிழ்ப்பித்தன்

| பிறசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| ஆக்கிராணம் | மோப்பு |
| ஆக்ஞை | கட்டளை |
| ஆகாசம் | வானம், விசும்பு, விண் |
| ஆகாயவிமானம் | வானூர்தி, விண்ணூர்தி |
| ஆகாரம் | உணவு |
| ஆகுலம் | ஆரவாரம் |
| ஆங்காரம்(அகங்காரம்) | செருக்கு |
| ஆச்சரியம் | வியப்பு |
| ஆசங்கை | ஐயுறவு, தடை |
| ஆசமனம் | உட்கொள்ளுகை |
| ஆசர்(ஆஜர்) | உள்ளேன், உள்ளாள் உள்ளாய், உள்ளார் |
| ஆசனம் | இருக்கை |
| ஆசனவாய் | பூறு |
| ஆசாமி | ஆள்,ஆசான்,புள்ளிக்காரன் |
| ஆசாரம் | ஒழுக்கம் |
| ஆசியம் | நகை,சிரிப்பு |
| ஆசிரமம் | தவநிலையம் வாழ்க்கை நிலை |
| ஆசீர்வாதம் | வாழ்த்து,வாழ்த்துரை |
| ஆசு | கடும்பா |
| ஆஸ்தி | உடைமை,சொத்து |
| ஆஸ்திகன்(ஆத்திகன்) | இறைநம்பிக்கையோன் நம்புமதத்தான் |
| ஆஸ்பத்திரி (ஆசுப்பத்திரி) | மருத்துவமனை மருத்துவச்சாலை |
| ஆட்சேபம் | துடை |
| ஆடம்பரம் | ஆரவாரம்,ஒட்டோலக்கம் |
| ஆஸ்திகம்(ஆத்திகம்) | உள்மதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆத்திரம் | பரபரப்பு |
| ஆத்துமா(ஆன்மா) | ஆதன்,உறவி,புலம்பன் |
| ஆதரவு | உதவி,களைகண் |
| இஷ்டன் | வேண்டியவன் |
| இடபம் | காளை,எருது |
| இடம்பம்(இடம்பீகம்) | ஊதாரித்தனம் |
| இதம் | நன்று |
| இந்திரன் | வேந்தன் |
| இந்திரியம் | புலன் |
| இமயம் | பனிமலை |
| இமிசை(இம்சை) | துன்பு,தொல்லை |
| இயந்திரம் | பொறி,மனை,சூழ்ச்சியம் |
| இயமன்(எமன்) | கூற்றுவன் |
| இரகசியம் | குட்டு,மருமம்மறைபொருள் |
| இரசம் | சாறு,சுவை. |
| இரசவாதம் | பொன்னாக்கம் |
| இரசாபாசம் | சுவைக்கேடு |
| இரசிகர் | சுவைஞர் |
| இரசிகன் | சுவைஞன் |
| இரசித்தல் | சுவைத்தல் |
| இரட்சிப்போன் | மீட்போன் |
| இரணவைத்தியம் | அறுவை,அசுரமருத்துவம் |
| இரத்தம் | அறுவை,குருதி |
| இரத்தமானியம் | உதிரப்பட்டி |
| இரத்தினம் | மணி,இரத்தினம் |
| இரதம் | தேர் |
| இரம்பம் | ஆரம்பம் |
| இராகம் | பண்,விருப்பு |
| இராசா,இராசன் | அரசன் |
| இராசதம் | மாந்திகம் |
| இராச்சியம் | அரையம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நோக்கி

(தேவகி வாசன், நோர்வே)

மனித வாழ்வியலின்
வெற்றிக்கு
தோல்விகள்தான் அடிக்கல்
தோல்வி வரும்போது
துவண்டு விடாது
நிமிர்ந்து நிற்க வேண்டும்



தெரிந்தே திட்டமிட்டு
உனை அழிக்க
நினைப்பார்கள்
அவர்களிடம் நியாயம்
கேட்காதே
உன் வெற்றியை நோக்கி நட

திட்டமிட்ட சதியினால்
அவர்களின் தவறுகளை
நியாயப்படுத்த பல பதில்கள்
நிட்சயம் அவர்களிடம்
உண்டு
ஆனாலும் நிமிர்ந்து நில்

சிலரது கைகளில்
பொருத்தமற்ற அதிகாரம்
அது கிடைத்து விட்டால்
அதன் மதிப்புத்தான்
என்னவாகும்?
சற்றுச் சிந்திக்க
தோன்றுகிறது

அந்த அதிகாரம்
தப்பான முடிவுகளோடு
தப்பான பாதையில்தான்
சென்று கொண்டிருக்கும்

ஒவ்வொரு மானிடரும்
வெற்றியின் படிக்கல்லை
நோக்கி நகர
முயற்சிக்க வேண்டும்
தோல்வியில் இருக்கும்
படியில் இருந்து
மேல் தோக்கி நடப்போம்.

தோல்வியே வெற்றியின்
அடிக்கல் படிக்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் விளிம்பில் (தொடர் - 02)

கவிச்சுடர் - சிவரமணி,
திருக்கோணமலை.

மலர் கட்டிலில் புரண்டபடி சோம்பல் முறித்தாள் .
'மலர் மலர்...'.
'என்னம்மா'
'ஏன்டா இவ்வளவு நேரம் தூங்குறாய் உடம்பேதும் அசதியாய் இருக்கா'
'இல்லம்மா சற்று தாமதமாய் தூங்கினேனா அதுதான்'
'சரி வா பால் காய்ச்சி வெந்தயம் ஏலம் தட்டிப்போட்டு வைத்திருக்கேன் சூடாறமுன் குடிம்மா'
'சரிம்மா' என எழும்பி தாயை அணைத்து முத்தமிட்டாள்

என் கண்ணு இப்பவும் சின்னப்பிள்ளை
என்ன கொஞ்சநாளாய் இவற்றை காணல இன்று பழைய மலராய் பார்க்க சந்தோசமாய் இருக்குடி செல்லம் -அம்மா
ஆமாம்மா நீ இப்படியே இருடா இழந்ததோ நடந்ததோ மறந்திடு என்ன செய்ய விரும்புறியோ அதை செய் உனக்கு பக்கபலமாய் நான் இருப்பேன்.
சரிம்மா முயற்சி செய்கிறேன்
தனது தனிப்பட்ட குளியலறைக்குள் நுழைந்தாள் மலர்
தாய் கதவை சாத்திவிட்டு நகர்ந்தாள்.
குளித்து முடித்து பால் குடித்து முடித்துவிட்டு முன்னறை வந்தாள்
சோபாவில் அமர்ந்து ரீவியை போட்டு தான் விரும்பும் பாடல்கள் பார்க்க தொடங்கினாள்.
அந்த நேரம் தந்தை வந்து பக்கத்தில் அமர்ந்தார்.
உடன் எழுந்தாள் மலர்
மலர் இரம்மா உன்னிடம் பேசி இப்படிஇருந்து எத்தனை நாளாச்சு சொல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லப்பா அது வந்து.....
தெரியும்மா கொஞ்சநாள் ஆகும் ஆனால் நியமம் ஒன்று உண்டல்லவா அதனால் நீ பழைய மலர். இந்த வீட்ட வலம் வரனும் அத நான் பார்க்கனும்.
அதுதான் ஒரு யோசனை அப்பா
சொல்லுடா
நான் பட்டப்படிப்பு முடிச்சாச்சு
ஆமா...
வேலைக்கு போகலாமென
நல்லது தான்மா நானும் ஓய்வெடுக்கனும் அல்லவா
அப்பா நான் கிராம அபிவிருத்தி திணைக்கள கல்வி மேலதிக கற்கை கற்று ஏதாவது பணியுடனான வேலைக்கு போகப்போகிறேன் .
அப்படியென்றால்
இப்ப ஆறுமாத வகுப்பு போகணும் அப்புறம் வேலை
ஏன்டா இங்க எங்க நிறுவனம் இருக்கு நாங்க இருக்கிறோம்
'அருள்கூர்ந்து மறுக்காதீங்க'
நான் மனதிருப்தி அடைந்தவுடன் மகளாக உங்களுக்கு கடமையை செய்வேன்
சரிம்மா நீ விரும்பியதை செய்
உனக்கு எது தேவையோ அதநான் செய்து தாரன் சரியா
சரிப்பா ரொம்ப நன்றி
நன்றி ஏன்மா நீ எங்கட ஒரேமகள் எனக்குபின் எல்லாம் உனக்கே உனக்கு செய்யாம யாருக்கு
ஆனால் நீதான் உழைக்கணும் பணியாற்றோணும் என பிடிவாதம் பிடிக்கிறாய்
உன் விருப்பம் எதுவோ அது எங்களுக்கும் விருப்பமே.
சாயங்காலம் கோயில் போகனும் முடிவுடன் நகர்ந்தாள்

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AR Traders

Professional Desktop Publishers & Printers



- Any type of Printing Works
- Offset Printing, Digital Printing
- Visiting Cards, Letter heads
- Bill Books, Receipt Books
- Leaflets, Newsletters
- Books, Magazine printing
- Photo Printing (any Size)
- Wedding Cards
- Any type of Invitation Cards
- Memorable Gifts
- Banner & Sticker Printing
- T Shirt & Cap Printing
- Tile, Mug & Rock Printing
- Colour Printing & Photocopy
- Book Layout, Typesetting
- Graphic Designing
- Fly mount, Photo Framing
- Crystal Works & Framing
- Shield Making,
- Rubber Stamp etc...
- Printing Material Sales

# 82, Thirugnanasampanthar Street, Tincomalee.

026- 454 5074 artraderstrinco@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜா பல்பொருள் வாணிபம்

රාජා විවිධ භාණ්ඩ වෙළඳසැල

**RAJA MULTI TRADERS**

077- 880 7008

அரசடி, திருக்கோணமலை



எம்மிடம் மிகவும் சுகாதாரமான முறையில்தயாரிக்கப்பட்ட,
யாழ்ப்பாண உணவுகளான

* நல்லெண்ணைய்
* பனங்கட்டி
* வடகம்
* எள்ளுபாகு
* ஒடியல்
* ஒடியல் மா
* ஊறுகாய்
* கச்சான் பிஸ்கற்
* மோர்மிளகாய்
* பப்படம், போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்

நாட்டு கோழி முட்டை,
தம்பலகமம் கைக்குத்து அரிசிமா கிடைக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org